RE/MAX REALTOR BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 30 செப்டம்பர் 2022 இதழ்:- 23

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# திருக்கோணேஸ்வரத்தைப் பாதுகாக்க 120 கோடி இந்துக்களும் இணைவோம்!

## தமிழக இந்து மக்கள் கட்சி பகிரங்க அறைகூவல்!



திருகோணமலை சிவன் கோயில் அங்கு வசிக்கும் பூர்வகுடி இந்து தமிழர்களை பாதுகாப்பதற்கு உலகெங்கும் இருக்கக் கூடிய 120 கோடி இந்துக்களும் ஒன்று பட்டு செயல்படுவோம் என்று தமிழ்நாடு இந்து மக்கள் கட்சியின் நிறுவுநர் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.(7ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் பொருளாதார நெருக்கடியால் பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் சேர்க்கும் பெற்றோர்கள்! 5ம் பக்கம்

# தேசிய சபையும் தோல்வியா? பலமடையும் ராஜபக்ஷாக்கள்!



தேசிய சபை என்ற பெயரில் அரசியல் கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய சபை ஒன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த முயற்சி பிசுபிசுத்துப் போயுள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்துமே இதில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்து விட்ட நிலையில். தேசிய சபை என்பது தற்போதைய அமைச்சரவையைப் போல பொது ஜன பெரமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக மட்டும் தான் (17ம் பக்கம் பார்க்க)

## தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் கஜேந்திரகுமாரின் கட்சியினரின் அடாவடித்தனம்! ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் குழப்பங்களுடன் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது குழப்பத்தில் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையால் (8ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



18 Years Real Estate Experience

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside


**Scarborough** **$499,800**
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route

### Sheppard / Markham



**Scarborough** **$449,900**
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space

### Sheppard & Warden


**Scarborough** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

### 401 & Mccowan



**Mississauga** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance

### Warden & St Clair



**Scarborough** **$629,000**
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo

### Markham & Eglinton



**Scarborough** **$699,999**
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances

### John W Taylor / Ferris Lane


**New Tecumseth** **$839,000**
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors

### Simcoe & Ritson


**Oshawa** **$850,000**
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

### Altona / Finch



**Pickering** **$979,000**
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage

### Harmony & Taunton


**Oshawa** **$1,224,888**
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop

### Donald Cousens & Hwy 7


**Markham** **$1,488,888**
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings


### Hwy 48/Castlemore

FOR LEASE

**Markham** **$3,600**
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens

FOR LEASE

**Markham** **$3,500**
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft


### Church / Rossland

FOR LEASE

**Ajax** **$3,175**
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood

FOR LEASE

**Brampton** **$1,800**
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave

FOR LEASE

**Markham** **$2,500**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கை அரசின் போக்கு அடக்குமுறைகள் நினைவூட்டுகிறது என்கிறது சர்வதேச மனிதஉரிமை அமைப்பு!



கொழும்பில் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீது பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையையும் 84 பேர் கைது செய்யப்பட்டமையையும் கண்டித்திருக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், இதன்மூலம் எதிர்ப்புக்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத இலங்கை அரசாங்கத்தின் போக்கு மீளுறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரித்திருக்கின்றன.

அரசாங்கத்தினால் நிகழ்த்தப்படும் அடக்கு முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சோசலிஸ இளைஞர் சங்கத்தினால் கடந்த சனிக்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியைக் கலைப்பதற்கு பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதுடன் தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டது.

இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இடைக்கால நிறைவேற்றுப் பணிப்பாளர் ரிறானா ஹஸன் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்:

உலகளாவிய ரீதியில் சிவில் சமூக இடைவெளியை ஒடுக்குவதற்கும், போராட்டக்காரர்களை அடக்குவதற்கும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை அமைதிப்படுத்துவதற்கும் அரசாங்கங்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான நடைமுறைகளைப் பயன்படுத்துவதை அவதானிக்கமுடிகின்றது.

அந்த வகையில் இவ்வார இறுதியில் (கடந்தவார இறுதி) அதற்கான சிறந்த உதாரணமாக இலங்கை அமைந்திருக்கின்றது. இருப்பினும் அதன்மூலம் இன்னமும் மக்களை நிறுத்த முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இவ்விடயம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

17 செப் 2022 சனிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 84 பேர் கைது செய்யப்பட்டிருப்பதன் மூலம் எதிர்ப்புக்களைப் பொறுத்துக் கொள்ளமுடியாத இலங்கை அரசாங்கத்தின் போக்கு மீளுறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் இந்த அமைதிப் போராட்டக்காரர்கள் அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவே போராடுகின்றார்கள். எனவே கைதுசெய்யப்பட்ட அமைதிப் போராட்டக்காரர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

அது மாத்திரமன்றி ஆர்ப்பாட்டங்களுக்கு மேலும் தடையேற்படுத்தும் வகையில் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள 'அதியுயர் பாதுகாப்பு வலய' உத்தரவு தொடர்பிலும் நாம் மிகுந்த கரிசனை கொண்டிருக்கின்றோம். அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதென்பது ஓர் மனித உரிமையாகும் என்று அப்பதிவில் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

# இந்துக்களின் தனித்துவத்தை பாதுகாத்தல்?

மீண்டும் பௌத்த மேலாதிக்கப் பிரச்சனை ஒரு பேசுபொருளாக மாறியிருக்கின்றது. ஒரு புறம் குருந்தூர்மலை விவகாரமும் மறுபுறம் திருகோணேஸ்வர ஆலயப் பிரச்னையும் பேசு பொருளாகியிருக்கின்றன. 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில், இந்த விடயம் அவ்வப்போது ஒரு பிரச்சனையாக வெளிக் கிளம்பியது. ஆரம்பத்தில் இந்த விவகாரங்களை சட்ட ரீதியாகக் கையாளலாம் என்னும் போதனையே செய்யப்பட்டது.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் சட்டத்தின் மூலம் இது போன்ற பல பிரச்னைகளை கையாளலாம் என்னும் வாதத்தை முன் வைத்திருந்தார். ஒரு சட்டத்தரணி அதனைத் தான் கூறவும் முடியும். ஆனால், இலங்கைத்தீவில் பௌத்தத்தின் அந்தஸ்து சட்டத்துக்கும் அப்பாற்பட்டதாக இருக்கும்போது என்ன செய்வது? குருந்தூர்மலை விவகாரம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

பௌத்த மேலாதிக்க விடயத்தில் பிக்குகள் சட்டத்தை பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. எப்போது வேண்டுமானாலும் அதனை மீறிச் செயல்படக் கூடிய ஆற்றலோடு இருக்கின்றனர். ஆனால் மறுபுறமோ, தமிழர்கள் மட்டும் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் இவ்வாறான பிரச்னைகளை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வது?

எத்தனை காலத்துக்கு இவ்வாறு எதிர்ப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருப்பது? ஆனால் எதிர்ப்புக்களாலும் விடயங்களை சரியாகக் கையாள முடியவில்லை. நிரந்தரமாகத் தடுக்க முடியவில்லை. இந்தப் பிரச்சனையை கையாளுவதற்கு ஒரு தேசிய பொறிமுறை அவசியம். அதாவது, இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் செயல்பாடுகள் மீள்வரையறை செய்யப்பட வேண்டும். அத்துடன், தொல்பொருள் பாதுகாப்பு என்னும் பெயரில் கொண்டு வரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் அனைத்தும் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட வேண்டும்.

இந்து ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகள், இந்துக்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இந்துக்களின் அடையாளங்களை தொல்பொருள் என்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் கையாள முற்படுவது முற்றிலுமாகக் கைவிடப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படும் இந்துக்களுடன் தொடர்புடைய தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பராமரிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான பிரத்தியேக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். ,தனை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். பிரச்னைகள் ஏற்படுகின்ற போது, இந்தக் குழுக்களுடன் கலந்துரையாடியே இறுதி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியம் என்னும் பெயரில் தேவையற்ற வகையில் ,ந்து ஆலய விடயங்களில் பலரும் தலையிடுவதும் தடுக்கப்பட வேண்டும். ஒரு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னும் வகையில் தலையிடுவதைத் தவிர, பல குழுக்களும் இதில் தேவையற்ற தலையீடுகளை செய்வது தடுக்கப்பட வேண்டும். இரண்டு பக்கத்திலும் இந்த விடயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஏனெனில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுமுகமாக பேசித் தீர்க்க வேண்டிய விடயங்கள், தேவையற்ற அரசியல் குறுக்கீடுகளால் திசைமாறி விடுகின்றன. இதற்கு திருகோணமலை கன்னியா சிவன் ஆலய விவாகரம் நல்ல உதாரணமாகும். கட்சி அரசியல் ரீதியான தலையீடுகள் பிரச்னையை வேறு திசைக்கு கொண்டு சென்றது.

இறுதியில் அப்பகுதி பௌத்த பிக்கு, சிங்களவர்களை அணிதிரட்டி எதிர்ப்பை வெளியிடும் நிலைமை உருவாகியது. ஆலய விவகாரங்களைக் கையாளும் போது, ஒரு பக்குவமான அணுகுமுறை அவசியம். முதலில் குறித்த ஆலயத்தின் நிர்வாக சபை மற்றும் அப்பகுதி சமூகத் தலைவர்கள் மட்டத்தில் தான் விடயங்கள் கையாளப்பட வேண்டும். அவர்களால் நிலைமைகளை சமாளிக்க முடியாதென்னும் நிலையில் தான், அரசியல் தலையீடுகள் இடம் பெற வேண்டும்.

அதேவேளை, இந்து புராதனங்களையும் தொன்மையையும் பாதுகாக்கும் நோக்கில், வடக்கு – கிழக்கு தழுவிய வகையில், இந்துக்களுக்கான பரந்த ஆலயங்கள் மற்றும் மதஸ்தாபனங்களுக்கான கூட்டமைப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டும் (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# வாழும்போது வாழ்த்துவோம்



## திருமதி வரதா சண்முகநாதன்

அவர்களுக்கு

# பாராட்டு விழா

**SUN OCT 16th 5 p.m**



இடம்: தமிழிசைக் கலாமன்றம்
1120 Tapscott Rd #3, Scarborough, ON M1X 1E8

நாள்: 16-10-2022 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: மாலை 5 மணி

**416 439 0505 | 647 205 7301 | 416 949 7795**

கனடா வாழ் வேலணை உறவுகள்

Sponsors: CashPoint (The Buck Starts Here!) | Platinum Car & Truck Rental | SUVAIYAKAM சுவையகம் Catering & Take out





ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

## கனடா - அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

## அம்பாள் அடியார்களே!

**01,08,15 ஒக்டோபர் 2022 சனி விரத நாட்களாகும்.**

**3வது சனி விரத உபயம்:- பாலமுரளி குடும்பம்**

26 செப் 2022 திங்கள்கிழமை:- நவராத்திரி விரதம் ஆரம்பம் .கலை நிகழ்ச்சிகள் இரவு 8.00 மணி தொடக்கம் இரவு 8.20 மணி வரை நடைபெறும்.

1ம் நாள் துர்கா பூஜை உபயம்:- நிமலன் சந்திரகுமாரி குடும்பம்.

27 செப் 2022 செவ்வாய்:-2ம் நாள் துர்கா பூஜை உபயம்:

ஸ்ரீகண்ணன் ஜெயகண்ணன் குடும்பம்

28 செப் 2022 புதன்கிழமை:- 3ம் நாள் துர்கா பூஜை உபயம்:

செல்வவடிவேல் ரவிசங்கர், ரவீந்தர்,கேதீஸ் குடும்பங்கள்

29செப்2022 வியாழக்கிழமை:- 4ம் நாள் லஷ்மி பூஜை உபயம்:

புஸ்பராஜா குடும்பம்.

30செப்2022 வெள்ளிக்கிழமை:-5 ம் நாள் லஷ்மி பூஜை உபயம்:

கங்காதரன் தியாகராஜா குடும்பம்

01ஒக் 2022 சனிக்கிழமை:- 6ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:

சதாசிவம் உதயமலர் குடும்பம்

02ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை

7ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:

உமையவன் குடும்பம்

03ஒக் 2022 திங்கள்கிழமை (மகிடாசுர சூரன்போர்)

8ம் நாள் சரஸ்வதி பூஜை உபயம்:

செல்வி சஜினா சாம் குடும்பம்

04ஒக் 2022 செவ்வாய்கிழமை:- ஆயுதபூஜை மானம்பூ

உபயம்: விஸ்வநாதன் பிரபாகரன் குடும்பம்.

04ஒக்டோபர் 2022 கேதாரகௌரி விரதம் ஆரம்பம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

# இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# வடபகுதியில் பொருளாதார நெருக்கடியால் பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் சேர்க்கும் பெற்றோர்கள்



பொருளாதார நெருக்கடியினால் பிள்ளைகளை பராமரிக்க முடியாது என தெரிவித்து , சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என வட மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளை வைத்து பராமரிக்க முடியவில்லை என சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோரின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலையே அதிகளவான பிள்ளைகளை பெற்றோர் சேர்த்துள்ளனர்.

வடக்கில் 2021ஆம் ஆண்டு 158 பிள்ளைகள் அவ்வாறு சேர்க்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியமையால் இந்த ஆண்டின் அரையாண்டு கால பகுதிக்குள் 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 124 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 45 பேரும் மன்னார் மாவட்டத்தில் 07 பேரும் வவுனியா மாவட்டத்தில் 08 பேருமாக 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக எம்மால் பிள்ளைகளை பராமரிக்க முடியாதுள்ளது என பெற்றோரால் முன் வைக்கப்படும் கோரிக்கைகளை எமது திணைக்களம் பரிசீலித்து , பெற்றோரின் பொருளாதார நிலைமைகளை அறிந்து உண்மையில் அவர்களால் பிள்ளைகளை பராமரிக்க முடியாதா என்பதனை உறுதிப்படுத்திய பின்னர் வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்க அனுமதிப்போம் என வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் இ.குருபரன் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் இருக்கும் பொருளாதார நெருக்கடி யாழ்ப்பாணத்தில் இல்லை. எதுவும் வாங்கலாம். மக்கள் அந்த மாதிரி இந்த மாதிரி வாழ்கின்றார்கள் என வந்து புலம்புவதை நம்பும் நம்மவர்களுக்கு இச்செய்தி காணிக்கை.

ஆடம்பரத்திற்கும் ஆலயங்களுக்கும் அந்தணர்களுக்கும் அள்ளிக் கொடுக்கும் பணத்தை இந்தக் குழந்தைகளைப் பராமரிக்கும் ஏதேனும் ஒரு இல்லத்திற்கு கிள்ளிக் கொடுங்கள். கோடி புண்ணியம் தேடி வரும் என்பதல்ல. நாளை உங்கள் சந்ததி தன் வேரைத் தேடிச் செல்லும் போது அந்த மண்ணின் மைந்தவர்களாக வாழப் போகின்றவர்கள் இந்த இல்லங்களில் வாழும் குழந்தைகளே!ஷ என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

# இலங்கைக்கு நாணய நிதியத்தின் உதவி எப்போது கிடைக்கும்? சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது என்ன?

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைப்பதற்கு மூன்று நான்கு மாதங்களாகலாம் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு நிதி வழங்கிய நாடுகளுடனான சந்திப்பின் போது இலங்கை அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு நிதி உதவி வழங்கிய நாடுகளிடமிருந்து நிதி தொடர்பான உத்தரவாதங்கள் இன்னமும் கிடைக்காததால் சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று குழு இலங்கைக்கு நிதி உதவியை வழங்குவதற்கான அனுமதியை வழங்க முடியாத நிலையில் உள்ளது இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைப்பதற்கு மூன்று நான்கு மாதங்களாகும் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை எதிர் கொண்டுள்ள நெருக்கடியின் அளவு பல்வகை தன்மை சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை செய்து கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள், இலங்கைக்கு எதிர்காலத்தில் நிதி உதவி கிடைப்பதற்கான அவசியமான கடன் பேண் தகு நிலைமை குறித்து கடன் வழங்கிய நாடுகளிற்கு தெரியப்படுத்துவதற்காக இலங்கை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை கடன் வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்தனர்,

இலங்கையை பிரதிநிதித்துவம் செய்த மத்திய வங்கி ஆளுநரும் திறைசேரி செயலாளரும் இலங்கை சமர்ப்பித்துள்ள திட்டத்திற்கு சர்வதேச நாணயநிதியத்தின் பணிப்பாளர் சபை டிசம்பர் - 2023 ஜனவரிக்குள் அனுமதி வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் நவம்பருக்குள் பொது மற்றும் தனியார் கடன் கொடுப்பனவாளர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கடன் வழங்கியவர்களுடன் கொள்கை ரீதியில் உடன்பாடு எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை பேச்சுவார்த்தைகள் அடுத்த வருடத்தின் இரண்டாவது காலாண்டு வரை தொடரும் அதன் பின்னரே மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் சட்டபூர்வமாக செயல்படுத்தப்படும்.

# வடக்கில் 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள் துஷ்பிரயோகம்!

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள் பாலியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இளவயது கர்ப்பம் காரணமாக 49 சிறுமிகள் பாதுகாப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் பதிவாகியுள்ளன.

2018ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 105பேரும், உடலியல் ரீதியாக 91 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு 106 பேர் பாலியல் ரீதியாகவும், 65 பேர் உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 118 பேரும், உடலியல் ரீதியாக 52 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு பாலியல் ரீதியாக 123 பேரும், உடலியல் ரீதியாக 15 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு கடந்த ஜஜீன் மாதம் வரையில் பாலியல் ரீதியாக 59 பேரும், உடலியல் ரீதியாக 8 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## போதைப் பொருட்களுடன் சிக்கிய மாணவர்கள்

யாழ். நகர் பகுதியில் மது மற்றும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட பாடசாலை நான்கு மாணவர்களை கடுமையாக எச்சரித்து மாணவர்களின் பெற்றோர்களிடம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஒப்படைத்துள்ளார்.

பிறவுண் வீதியில் உள்ள ஆலயத்திற்கு அருகில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் புலனாய்வு பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்திருந்தனர். அங்கு இருந்த நான்கு மாணவர்களில் ஒரு மாணவன் 'மாவா' போதைப்பாக்குடனும் ஏனைய மூன்று மாணவர்கள் மதுபானத்துடனும் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(22ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் இராஜதந்திரம் புரிகின்றதா?

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி, கையெழுத்து சேகரிக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படு வருகின்றன. பிறிதொரு புறம், திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்திற்குள், தொல்பொருள் திணைக்களத்தின் அத்து மீறல்கள் தொடர்பான பிரச்சனை பேசப்படுகின்றது. இன்னொரு புறம் குருந்தூர் மலையில் பௌத்த விகாரை நிறுவும் விடயம் விவாதிக்கப்படுகின்றது. இதற்கு முன்னர், வலிவடக்கில் கடற்படையினர் காணி பிடிப்பதான பிரச்னையில் கவனம் செலுத்தப்பட்டது. சில மாதங்களுக்கு முன்னர் மீனவர் பிரச்னை பேசு பொருளாக இருந்தது. இந்தப்பின்புலத்தில் வடக்கு மாகாணத்தின் மீனவர்களை சீனத் தூதுவர் சந்தித்திருந்தார். பின்னர் அது ஒரு அரசியல் விவகாரமாக மாறிது. அது பற்றியும் தமிழ் பகுதிகளில் சலசலப்புக்கள் இடம் பெற்றன.

இவ்வாறு பேசப்படும் ஒவ்வொரு விடயத்தையும் எடுத்து நோக்கினால், அனைத்து விடயங்களும் சில நாட்களுக்கு பேசுபொருளாக இருக்கும் பின்னர் மறைந்துவிடும். இவ்வாறு தான் கடந்த சில வருடங்கள் நகர்ந்திருக்கின்றன. இதனை ஆழமாக நோக்கினால், தமிழ் தலைமைகள் என்போரின் கவனம் முழுவதும் சிறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதை காணலாம். ஆனால் இந்த பிரச்சனைகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது அரசியல் தீர்வற்ற சூழலாகும்.

அரசியல் தீர்வின்றி இவ்வாறான பிரச்சனைகள் எதனையுமே நிரந்தரமாக தீர்க்க முடியாது. ஆனால் பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வான அரசியல் தீர்வை காணும் விடயத்தில் ஒரு உறுதியான நகர்வை, தமிழ் தேசிய தரப்புக்கள் அனைத்தும் ஒன்று பட்டு, மேற்கொள்ள முடியவில்லை. இதனைத் தான் கொழும்பும் விரும்புகின்றது.

நடைபெறும் ஒவ்வொரு பிரச்னைகளையும் எடுத்து நோக்கினால் சிறிய சிறிய விடயங்களில் தமிழர் தரப்புக்களின் கவனத்தை சிதறடிப்பதே, இதற்கு பின்னாலிருக்கும் தந்திரமாகும். ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தனர். பல்வேறு வாதப் பிரதி வாதங்களுக்கு பின்னர் நீண்ட காலத்திற்கு பின்னர், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு, தமிழ் தேசியகட்சிகள் ஒன்றுபட்டு கோரியிருந்தனர்.

ஆனால் கடிதத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் விடயங்களை குறித்த கட்சிகள் முன்னெடுக்கவில்லை. விடயங்களை மிகவும் திட்டமிட்டு முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் தமிழ் கட்சிகளோ அவ்வப்போது அரசியல் பரப்பில் எட்டிப்பார்க்கும் - அதாவது, மழைக்காலத்து ஈசல் போன்று தோன்றும் பிரச்சினைகள் மீது தங்களின் கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கின்றனர். பிரச்னைகளின் ஆணி வேரை விட்டு விடுகின்றனர். இதுதான் சிங்கள ராஜதந்திரத்தின் இலக்காகும். தமிழ் கட்சிகளின் கவனத்தை சிதறடிக்கும் நோக்கில் தான், அவ்வப்போது புதிய பிரச்னைகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் இவ்வாறு அவ்வப்போது பூதாகரமாக்கப்படும் பிரச்னைகளுக்கான நிரந்தரமான தீர்வையும் காண முடியவில்லை.

உதாரணமாக மீனவர் பிரச்னை தொடர்பில் அதிகம் பேசப்பட்டது. சுமந்திரன் கடலிலும் வித்தியாசமான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அந்த நடவடிக்கைகளின் விளைவாக பிரச்சினை தீர்ந்ததா? இல்லையே! இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கையெழுத்துக்களை சேகரிக்கின்றார். இதன் பயன் என்ன?

சிங்கள ராஜதந்திரம் எதனை விரும்புகின்றதோ அதனையே தமிழ்தேசிய கட்சிகள் என்பன, மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றன.

இந்திய பிரதமரை அணுகிய கட்சிகள், அதனடிப்படையில் புதுடில்லியின் ஊடகங்கள், மற்றும் அயலுறவு கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் சிந்தனைக் கூடங்களுடன் ஊடாடியிருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கானஅரசியல் தீர்வு விடயத்தை, இந்திய மட்டத்தில் பேசு பொருளாக்கியிருக்க வேண்டும் அல்லது மீண்டுமொரு கடிதத்தை அனுப்பியிருக்க வேண்டும்.

முன்னேற்றங்கள் தொடர்பில் இந்திய தூதரகத்தோடு உரையாடியிருக்க வேண்டும். ஆனால், அது தொடர்பில் ஆறு கட்சிகளின் தலைவர்கள் என்போரால் சிந்திக்க முடியவில்லை ஆனால் மாறாக, சிறிய விடயங்களில் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

# குருந்தூர்மலை பௌத்த மத அடையாளங்களைப் பாதுகாப்போமென வலியுறுத்தி கொழும்பில் சிங்கள பௌத்த வெறியர்கள் ஆர்ப்பாட்டம்




நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப் படுத்தப்பட்டுள்ள பின்னணியில் குருந் தூர் மலையில் பௌத்த மத வழி பாடுகளுக்கு தடையேற்படுத்தப்பட்டுள்ள மைக்கு ஒட்டு மொத்த தமிழ்களும் வெட்கப்பட வேண்டும்.

சிங்களவர்களுக்கு பொறுமையுண்டு. இனவாத செயற்பாடுகளில் ஈடுப்படுவதை தமிழ் அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்ளாவிடின் சட்ட நடவடிக்கை எடுப்போம் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குருந்தூர் மலை - பௌத்த மத அடையாளங்களை பாதுகாப்போம் என வலியுறுத்தி,பௌத்த தேரர்கள்,சிவில் அமைப்பினர் திங்கட்கிழமை (26) சுதந்திர சதுக்க வளாகத்தில் போராட்ட த்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடு கையில்,

பௌத்த நாட்டில் பௌத்த மத பாரம் பரிய அடையாளங்கள் மற்றும் உரிமை களை பாதுகாப்பது சிங்களவர்களின் கடமை மாத்திரமல்ல இலங்கையில் வாழும் அனைவரது கடமையாகும். 2000 வருட காலம் பழமை வாய்ந்த குருந்தூர் மலையில் பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாப்பது அவசிய மானது.

பழமை வாய்ந்த குருந்தூர் மலை விகாரையினை புனரமைத்து பௌத்த மத வழிபாடுகளில் ஈடுப்பட ஒரு சில இனவாதிகள் இடமளிக்கவில்லை. இது முற்றிலும் வெறுக்கத்தக்கதொரு செயற் பாடாகும். குருந்தூர் மலையில் பௌத்த மத மரபுரிமைகள் சவாலுக்குட்படுத்த ப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்த தீவிரமடைந்த போது கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்றன. வீதியில் தேர் ஊர்வலம் சென்றன. சிங்களவர் களுக்கு பொறுமையுண்டு. நாட்டில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குருந்தூர் மலையில் பௌத்த மத வழிபாடுகளுக்கு தடையேற்படுத்தப் பட்டுள்ளமைக்கு ஒட்டுமொத்த தமிழர் களும் வெட்கப்பட வேண்டும்.

திருகோணேச்சரம் ஆலயத்தில் வளாகத் தில் உள்ள கடைகளை அகற்றுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வலி யுறுத்துகிறார்கள். நாட்டில் பெரும் பாலான பகுதிகளில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு முன்பாக முஸ்லிம், தமிழ் சமூகத்தினர் கடைகளை வைத்து ள்ளார்கள். தமிழ் தேசிய கூட்டமைப் பினர் இனவாதம் பேசிக் கொண்டு இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை தோற்றுவிக்கிறார்கள். கூட்டமைப்பினர் இனவாத செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## போராட்டங்களை நடத்துவோருக்கு எச்சரிக்கை

நாட்டில் ஸ்திரமான சூழல் உருவாகி வரும் நிலையில் போராட்டங்களை நடத்தி மக்களுக்கு இடையூறு விளை வித்தால் பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் விசேட ஊடகவியலாளல் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். தேவை ஏற்பட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவ பாதுகாப்புப் படைகள் தயாராக இருப்பதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்து ள்ளார்.

சோசலிச இளைஞர் சங்கத்தால் மருதானையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, 83 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் உடனடி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிக் கையை காலை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு



பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமை கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தமிழக இந்து மக்கள் கட்சி பகிரங்க அறைகூவல்!

## திருக்கோணேஸ்வரத்தைப் பாதுகாக்க 120 கோடி இந்துக்களும் இணைவோம்! அயோத்தியில் பாபர்மசூதிக்கு நடந்தது திருமலையில் புத்தவிகாரைக்கு நடக்கும்!

திருகோணமலை சிவன்கோயில், அங்கு வசிக்கும் பூர்வகுடி இந்து தமிழர்களை பாதுகாப்பதற்கு உலகெங்கும் இருக்கக் கூடிய 120 கோடி இந்துக்களும் ஒன்று பட்டு செயல்படுவோம் என்று தமிழ்நாடு இந்து மக்கள் கட்சியின் நிறுவுநர் தலைவர் அர்ஜுஜீன் சம்பத்தெரிவித்துள்ளார்.

அத்துடன், திருகோணமலையில் புத்தர் சிலைகளை நிறுவி சிவன் கோயிலை அழிக்க முயன்றால் பௌத்தர்களைக் குடியேற்றி இந்துக்களின் நம்பிக்கை வாழ்வியலைச் சிதைக்க முயன்றால் பாபர் மசூதிக்கு அயோத்தியில் என்ன நடந்ததோ, திருகோணமலையில் பௌத்த விகாரைகளுக்கும் புத்தருக்கும் நடக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.



இராவணன் காலத்துக்கு முந்தைய 10,000 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பழமையான திருகோணேச்சரம் சிவன் கோயிலை முதன் முதலாக 400 ஆண்டு களுக்கு முன்னர் இடித்தனர் கத்தோலிக் கர்கள். இராமனுக்கு அயோத்தி இராவணனுக்கு திருகோணமலை என்று 120கோடி இந்துக்கள் உலகெங்கும் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையே அவர்களின் வாழ்வியல். அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் அயோத்தியில் மசூதியைக் கட்டினர். 120 கோடி இந்துக்களுமாக அதை அகற்றினார்கள். தற்போது அங்கே இராமருக்குக் கோயில் கட்டு கிறார்கள்.

ஆக்கிரமிப்பாளராக பௌத்த சமயத்தவர் திருகோணமலையில் புத்தர் சிலைகளை நிறுவி சிவன் கோயிலை அழிக்க முயன்றால் பௌத்தர்களைக் குடியேற்றி இந்துக்களின் நம்பிக்கை வாழ்வியலைச் சிதைக்க முயன்றால் பாபர் மசூதிக்கு அயோத்தியில் என்ன நடந்ததோ, திருகோணமலையில் பௌத்த விகாரைகளுக்கும் புத்தருக்கும் நடக்கும். 120 கோடி இந்துக்கள் சார்பில் பௌத்த சமய, இனவாத வெறியர்களை எச்சரிக்கிறேன். திருகோணமலை மாவட்டத்தின் பூர்வ குடிகள் இந்து தமிழர்கள் சைவர்கள் ஆவார்கள். இலங்கை அரசாங்கம் சிங்கள பௌத்த மதவெறி

(22ம் பக்கம் பார்க்க)

# அரச நிதியுதவியில் திலீபனின் தூபி வேலி புனரமைப்பா? அமைச்சு மட்ட குழு அதிகாரிகளிடம் விசாரணை!

1988ம் ஆண்டு செப்ரெம்பர் 28 நாம் திகதி நிர்மாணிக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவில் தூபி யுத்த காலத்தில் சேதமடைந்திருந்த நிலையில் அதற்குரிய வேலி புனரமைப்புக்கென கடந்த 2017 ஆம் ஆண்டு 2 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஒதுக்கீட்டின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தூபியினை சுற்றிவேலி யாழ் மாநகர சபையினரால் புனரமைப்பு செய்யப்பட்டது

யாழ். நல்லூர் பின்வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு நல்லாட்சி அரசின் காலத்தில் பாதுகாப்பு வேலி, அரச நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டமை தொடர்பில் 4 ஆண்டுகளின் பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் இந்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. நல்லாட்சி அரசின் காலத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சுக்கு ஊடாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் பாதுகாப்பு வேலிக்கான நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு அமைவாக அது அமைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு நல்லாட்சிக் காலத்தில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றனர். இதன்போது நீதிமன்றத்துக்கு முன் வைக்கப்பட்ட சமர்ப்பணங்களில், திலீபனின் நினைவுத் தூபி அரச நிதியில் அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மூன்று மாதங்களுக்கு முன்னர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மிகக் காட்டமான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு அரச நிதியை எவ்வாறு ஒதுக்க முடியும்? என்று அதில் கேள்வி எழுப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின்மூன்று அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகளிடம் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த தூபியானது புதிதாக கட்டப்பட்டதா? அல்லது ஏற்கனவே இருந்த தூபியாயின் அதற்கு ஏதாவது சான்றுகள் உள்ளனவா போன்ற விடயங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் சென்றுள்ள மூன்று பேர் அடங்கிய உள்நாட்டு அலுவலக அமைச்சின் அதிகாரிகள் புலன் விசாரணையினை முன்னெடுத்துள்ளனர் இந்தச் சம்பவங்கள் தொடர்பில்



நிதி ஒதுகக்கீட்டினை முன்னெடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# இந்திய அரசியல் தரகர் சுப்பிரமணியன்சுவாமி மகிந்தாவின் நவராத்திரி விழாவில் பங்கேற்றார்



இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதன்கிழமை காலை கொழும்பு சென்ற இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்ற நவராத்திரி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார் முக்கிய அரசியல்வாதிகள் சிலர் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய நண்பரான சுப்பிரமணியன் சுவாமி, நிகழ்வின் இறுதியில் மகிந்த ராஜபக்ஷவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு என்ன நெருக்கடி வந்தாலும் உங்களுடன் நான் உறுதியாக நிற்பேன் எனக் கூறிய போது மகிந்த ராஜபக்ஷ உணர்ச்சி வசப்பட்டதாக நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் தெரிவித்தார்கள்.இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் சுப்பிரமணியன் சுவாமி சந்தித்துப் பேசினார். இதன்போது என்ன பேசப்பட்டது என்பதையிட்டு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் சுப்பிரமணியன் சுவாமி சந்திக்கவுள்ளார்.

# தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் கஜேந்திரகுமாரின் கட்சியினரின் அடாவடித்தனம்! ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் குழப்பங்களுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது குழப்பத்தில் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியான தமிழ்தேசிய மக்கள் முன்னணி எல்லை மீறி முன்னாள் போராளிகள் மாவீரர்குடும்பத்தினர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அரசியல் கைதிகளின் உறவினர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சக கட்சியினர் என அனைத்து தரப்புகளுடனும் வலிந்து முரண்பாடுகளை ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் நடந்து கொண்டனர்.

அவர்கள் அவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டிருந்த போது அவர்களை கட்டுப்படுத்தாது, அருகில் இருந்த கொட்டகைக்குள் இருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தமை அங்கிருந்த பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

தியாக தீபத்தின் நினைவேந்தல் நாளின் தொடக்க நாளுக்கு முந்தைய நாளான 14ஆம் திகதி இரவு அகில இலங்கை தமிழ் காங்கிரசினர் நினைவிடத்தினை மறைத்தவாறு பந்தல் அமைத்த போது அங்கிருந்தவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாம் என்ற போது அவர்களுடன் முரண்பட்டார்கள். தொடக்க நாளான மறுநாள் , தியாக தீபத்தின் நினைவிடத்தில் வைக்கப்பட்டு இருந்த படத்தினை மறைத்தவாறு காங்கிரசினர் கொடி கம்பங்களை நாட்டினார்கள். அவ்வாறு



படங்களை மறைக்குமாறு கொடி கம்பங்களை நட வேண்டாம் என்ற போதும் முரண்பட்டுக்கொண்டார்கள். இறுதி நாள் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை 24 செப் 2022 செய்ய முற்பட்ட போது முரண்பட்டனர்

இதேவேளை தியாக தீபத்தின் நினைவிடத்தை. காலை முதல் காங்கிரசினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். நினைவிடத்தை சுற்றி மஞ்சள் உடுப்புக்களுடன் நின்று அஞ்சலி செலுத்த வருபவர்களை மாத்திரம் அனுமதித்து மற்றைய கட்சிகள், அமைப்புக்களை சார்ந்தவர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தியாக தீபம் உயிரிழந்த 10.48 மணியளவில் பொதுச்சுடர் ஏற்றப்படுவதாக இருந்த போது தாமே அவற்றை முன்னிருந்து ஏற்ற வேண்டும் எனும் போட்டியில், தள்ளு முள்ளுக்களுக்கு மத்தியில் 3 நிமிடங்கள் முந்தி 10.45 மணியளவில் தீபத்தினை ஏற்றினார்கள். கைதடி பகுதியில் இருந்து இரு இளைஞர்கள் தூக்கு காவடி எடுத்து தியாக தீபத்தின் நினைவிடத்தினை 10.40 மணியளவில் வந்தடைந்தனர். அவ்வாறு வந்தவர்கள் நினைவிடத்தின் முன்பாக காவடியை இறக்க முற்பட்ட போது காங்கிரசினர் அனுமதிக்காது முரண்பாடுகளை வளர்த்தனர்.

தாம் நினைவிடம் முன்பாக தீபம் ஏற்ற போகிறோம். என அவ்விடத்தினை சுற்றி கைகளை கோர்த்தவாறு நின்றனர். அதன் போது காவடியுடன் வந்தவர்கள் காவடியை இறக்கிய பின்னர் தீபம் ஏற்றுங்கள் தீபம் ஏற்றுவதற்கு 08 நிமிடங்கள் இருக்கின்றன தானே என கேட்ட போது அவ்வாறு அனுமதிக்க முடியாது என முரண்பட்டுக் கொண்டனர். அதனால் அப்பகுதியில் தர்க்கம் ஏற்பட்ட போது அந்தஅமளிக்குள் அவசரப்பட்டு மூன்று நிமிடங்களுக்கு முன்னரே தீபம் ஏற்றினார்கள். அமளிக்குள் சுடர் ஏற்றிய பின்னரே ஒலிபெருக்கியில் இரு நிமிட அக வணக்கம் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது. அதன் போதும் அவ்விடத்தில் அமைதியின்மை காணப்பட்டமையால் வேலன் சுவாமிகள் அமைதி காக்குமாறு கூறிய போது ,காங்கிரசினர் தகாத வார்த்தைகளால் அவரை பேசினார்கள். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வின் போது மலர் அஞ்சலி செலுத்த வருவோருக்கு இடையூறாக அவ்விடத்தில் தாமே மலர் அஞ்சலி செலுத்த தடைகளை ஏற்படுத்தும் விதமாக நினைவிடத்தில் குழுமி நின்றனர். மலரஞ்சலி செலுத்தியவர்கள் கீழே இறங்கி மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்குமாறு கோரிய போது முரண்பட்டு கொண்டனர்.

காலை 10.40 மணியளவில் நினைவிடத்திற்கு வந்த காவடியை 11.15 மணி தாண்டியும் இறக்க விடாது தடுத்து வைத்திருந்த நிலையில் தடைகளை மீறி முன்னாள் போராளிகள் காவடியை இறக்க முற்பட்ட போது தர்க்கம் ஏற்பட்டது. அவற்றையும் மீறி முன்னாள் போராளிகள் காவடியை நினைவிடத்தின் முன்பாக இறங்கினார்கள்.

காவடியை இறக்க தடை ஏற்படுத்தும் விதமாக பிரதான தீபத்தினை காங்கிரசினர் நினைவிடத்தின் முன்பாக வைத்திருந்தனர். காவடி இறக்க ஏதுவாக அதனை சற்று தள்ளி வைக்குமாறு கூறிய போது ஏற்பட்ட தள்ளு முள்ளில் தீபத்தின் சுடு எண்ணெய் பட்டு ஒருவர் காயங்களுக்கு உள்ளானார். அவரை அங்கிருந்தவர்கள் அம்பியுலன்ஸ் வண்டியில் ஏற்றி யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

(22ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# போதைப் பொருள் விநியோகத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

## இது நம்ம யாழ்ப்பாணம் -1


**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக**
**– பகிரதன் –**

யாழ்ப்பாண காலாசாரத்தை கந்தபுராண கலாசாரம் என்று சொன்னார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. கட்டுப்பாடு, ஒழுக்கம், பெரியோருக்கு மரியாதை, பெண்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை என வாழ்ந்தது எமது சமூகம். 2009 வரையில் இந்த நிலை நீடித்தது எனச் சொல்லமுடியும்.

இந்த கந்தபுராண கலாசாரம் இப்போது போதைவஸ்த்து கலாசாரமாக மாறி விட்டது. கடந்த சில வருடங்களாக வாள்வெட்டுக் கலாசாரம் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தது. இப்போது வாள்வெட்டுக்கள் சற்றுக் ஓய்ந்திருப்பதாக நிம்மதிப் பெருமூச்சு விட முற்பட்டபோது, போதை வஸ்த்து கலாசாரத்தின் விளைவுகள் யாழ்ப்பாண மக்களை பதறவைக்கின்றது.

கடந்த ஒரு வார காலத்தில் வெளிவந்திருக்கும் பல செய்திகள் இந்த போதைப் பொருள் பரவலுக்கு உடனடியாக முடிவு கட்டா விட்டால் பாரதுாரமான விளைவுகள் ஏற்படலாம் என்ற எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது. அதே வேளையில் தன்னார்வ அமைப்புக்கள் சில இந்த போதை வஸ்த்துப் பழக்கத்துக்கு இலக்காகும் இளைஞர்களை மீட்பதற்கான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றன.

அவ்வாறு இளைஞர்களை மீட்டு அவர்களை புனர்வாழ்வுக்குக் கொண்டு செல்லும் அமைப்புக்களின் முக்கியஸ்த்தர்கள் பலர் கூட கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனால், அவர்கள் றிஸ்க் எடுத்தே அதாவது உயிரைப் பணயம் வைத்துத் தான் இந்தப் பணியை முன்னெடுக்கின்றார்கள். இந்த போதைக் கலாசாரத்தின் பின்னணியில் அதிகாரம் மிக்கவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதை இவை உறுதிப்படுத்துகின்றன.



### பதற வைக்கும் செய்திகள் அதிகரிக்கும் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக் கொண்ட நபரொருவர் கடந்த வாரமும் உயிரிழந்துள்ளார். பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை 24ஆம் திகதி நடை பெற்றிருக்கின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அவர் ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவில் பயன்படுத்தியதனால் உயிரிழந்தார். மருத்துவ பரிசோதனையிலும் அவரது உயிரிழப்புக்கு ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவு எடுத்துக் கொண்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். இவரை போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுத்தியவர்கள் யார் என்பது தெரி விக்கப்படவில்லை.அந்த வலைப் பின்னலைக் கண்டுபிடிப்பதற்கு பொலிசார் தவறுவதால் தான் இவ்வாறான சம்பவங்கள் தொடர் கதையாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்த்து பாவனையால் உயிரிழந்த முதலாவது நபர் இவரல்ல. இதற்கு முன்னர் கடந்த இரண்டு மாத காலத்தில் யாழ்ப்பாணத்தில் பத்து இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையால் உயிரிழந்திருக்கின்றார்கள். கடந்த சனிக்கிழமை உயிரிழந்தவர் பதினோராவது இளைஞர் என்பது அதிர வைக்கும் உண்மை. இதனைவிட கடந்த வாரம் யாழ். நகரில் வைத்த நான்கு மாணவர்கள் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பிட்ட நான்கு மாணவர்களும் யாழ். நகரின் பிரதான பாடசாலை ஒன்றில் உயர்தரம் படிக்கும் மாணவர்கள் என்பதும் அதிரவைக்கும் மற்றொரு தகவல்.

இம்மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மற்றொரு சம்பவம் போதைப் பழக்கம் ஒரு மனிதனை எந்தளவுக்கு கீழ் நிலைக்குக் கொண்டு செல்கின்றது என்பதற்கு நல்ல உதாரணம். போதைப்பொருள் பாவனைக்கு உள்ளான இளைஞர் ஒருவரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட அவரது சகோதரியான இளம் பெண் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கின்றார் சுன்னாகம் பொலிஸ் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவம் போதைப் பொருட்களால் யாழ்ப்பாணம் எந்தளவுக்கு சீரழிந்து செல்கின்றது என்பதற்கு மற்றொரு உதாரணம்.

### வாராந்தம் 30 மாணவர்கள் சிகிச்சைக்காக அனுமதி

யாழ்ப்பாணத்தில் போதை பொருள் பயன்படுத்தி இரண்டு மாதத்தில் 11பேர் உயிரிழந்துள்ளதாகவும், 320பேர் வரையில் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் போதைக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மையத்தில் இரண்டு மாத கால பகுதிக்குள் 134 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 10 பேர் பெண்கள் என்பது கூடுதல் அதிர்ச்சி.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களில் பெரும்பாலானோர் 18 வயதிற்கும் 23 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களே என தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் அதிக போதைப்பாவனைக்கு உள்ளானவர்கள் வாழும் கிராமமாக சுமார் 20 கிராமங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்த போது 20 அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கலாம் என்பதையும் அறியமுடிந்தது.



**போதைக்கு அடிமையான சகோதரனால் வன்புணரப்பட்ட இளம்பெண் உயிரிழப்பு!**

யாழ்ப்பாணம், செப். 12

போதைப்பொருளுக்கு அடிமையான சகோதரனால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப் பட்ட இளம் பெண் உயிரை மாய்த்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

20 வயதுடைய இளம் பெண்ணே உயிரை மாய்த் துள்ளார். அவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவித்த மூத்த சகோதரன் தனது சகோதரியை வன்புணர்வுக்கு உட்படுத் தியுள்ளார். அதனால் விரக்தியடைந்த சகோதரி குரல் பதிவில் நடந்தவற்றை பதிவு செய்து நண்பிக்கு அனுப்பிவிட்டு தனது உயிரை மாய்த்துள்ளார்.

மூத்த சகோதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இதன்போது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத் தில் ஹெரோயின் உள்ளிட்ட உயிர்க்கொல்லி போதைப்பொருள் பாவனை இளைஞர்களிடையே அதிகரித்துள்ளதனால் பல்வேறு சமூகப் பிறழ்வு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதுடன் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு வாரமும் போதைப் பொருட் பாவனைக்கு அடிமையான நிலையில் சாவகச்சேரியில் இடம் பெறும் உளவள சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்படுகின்றார்கள். தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பாளர் அஜந்தன் சியாமினி இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பயன்பாடு திட்டமிட்டு பரப்பப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

### மருத்துவமனையில் அவசர ஆலோசனை

இந்தப் பின்னணியில் தான் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. யாழ். போதனா வைத்திசாலையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முக்கிய அதிகாரிகள் பலரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இங்கு கருத்து வெளியிட்ட டாக்டர் சத்தியமூர்த்தி, யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் தலா இரண்டு உத்தியோகத்தர்கள் போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக பயிற்றுவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இதே போல யாழ். மாவட்டத்திலுள்ள 57 பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் போதைப் பொருள் ஒழிப்பு வழிகாட்டல் வகுப்புக்கள் நடத்த ப்பட்டு ள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

அரசாங்கத் தரப்பிலிருந்தும் அரச சார்பற்ற சில நிறுவனங்களும் போதைப் பொருட்களை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டு பல முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இருந்த போதிலும் இவற்றையும் தாண்டி குடா நாட்டுக்குள் போதைப் பொருட்கள் இரகசியமாகக் கொண்டு வரப்பட்டு, இளைஞர்களை இலக்காகக் கொண்டு விநியோகம் செய்யப்படுகின்றது. அதிகார வர்க்கம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள ஒரு குழுவே நன்கு திட்டமிட்ட முறையில் இதனை முன்னெடுப்பதாகத் தெரிகின்றது. அதே வேளையில், இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் பிடி பட்டாலும் அந்த வலை அமைப்பை கண்டு பிடிக்கவோ செயலிழகச் செய்யவோ முடியாத நிலை உள்ளது.

### கடல் வழியாக கஞ்சா கடத்தப்படுவது எப்படி?

இலங்கையில் மக்களை அதிகளவுக்குச் சென்றடைவது கேரள கஞ்சா எனச் சொல்லப்படுகின்றது. இது பெருமளவுக்கு தமிழகத்தின் இராமநாதபுரம் பகுதியிலிருந்தே இலங்கையின் வடபகுதிக்கு கடல்வழியாகக் கடத்தப்படுகின்றது. இதில் சம்பந்தப்படுபவர்கள் பெருமளவுக்கு கடற்படையினரை அல்லது பொலிஸாரைக் கண்டவுடன் கஞ்சா பொதிகளை கடலில் விட்டு விட்டுத் தப்பிச் சென்று விடுகின்றார்கள்.

ஆனால், கடந்த மாதம் தமிழகத்திலிருந்து கஞ்சாவை கடத்திக் கொண்டு வந்த ஐந்து பேரை கடற்படையினர் கைது செய்தனர். இவர்கள் ஐந்து பேரும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தமிழகத்தின் இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற மாவட்டங்கள் யாழ்ப்பாணத்துக்கு அருகில் இருப்பதால், மஞ்சள், கடல் அட்டை, விவசாய உரங்கள் போன்றன அண்மைக் காலத்தில் பெருமளவுக்கு கடத்தப்படுகின்றன.

இதனை விட இலங்கையிலிருந்து தங்கம் பெருமளவுக்கு தமிழகத்துக்கு கடல்வழியாகக் கடத்தப்படுகின்றது. இதனைத் தடுப்பதற்காக இந்தியாவின் கடற்படை, கடலோர காவல்படை, மாவட்ட காவல் படை, பொலிஸார் உட்பட பல பிரிவுகள் ஒவ்வொரு மட்டத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதனை விட இலங்கையின் கடற்படை ரோந்துக் கப்பல்களும் தினசரி ரோந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

இந்தக் கண்காணிப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி பெருமளவு கஞ்சா யாழ்ப்பாணத்துக்குள் கடத்தி வரப்படுகின்றது. கடந்த 12 வருடங்களில் 27 ஆயிரம் கிலோ கஞ்சா பிடிபட்டிருப்பதாக பொலிஸ் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

ஆனால், பிடிபடாமல் இதனை விட அதிகளவு கஞ்சா கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்பதை யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. கஞ்சா மட்டுமன்றி ஹிரோயின், மாபா, ஐஸ் போன்ற உயிர்க்கொல்லி போதைப் பொருட்களும் யாழ்ப்பாணத்தில் இப்போது தாராளமாகப் பயன்பாட்டில் உள்ளது.

இந்த போதைப் பொருள் விநியோகத்தின் பின்னணியில் செயற்படுபவர்கள் யார்? யாழ்ப்பாண சமூக – குடும்ப கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்தப் பிரச்சினைக்கு காரணமா? இதனை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? போன்ற கேள்விகளுக்கான பதில்களுடன் அடுத்த வாரமும் ஈழநாடு மூலமாக கனடா வாழ் அன்புக்குரிய வாசகர்களை சந்திப்போம்..

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 செப்டம்பர் 2022 முதல் 23 செப்டம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2022 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 25செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 100வது பிறந்தநாள் நினைவாக



### திருமதி குமரேசு நீலாயதாட்சி

யாழ்.வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த அமரத்துவமாது திருமதி குமரேசு நீலாயதாட்சி அவர்களது 100வது பிறந்த நாள் 15 செப்டம்பர் 2022 ஆகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக 26 செப்டம்பர் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரத்துவமாது திருமதி குமரேசு நீலாயதாட்சி அவர்களது 100வது பிறந்த நாள் அன்று அவரை நினைவு கூரும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது,22வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு திருமதி மனோன்மணி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2022 செவ்வாய்க்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வைத்தியலிங்கம் யோகம்மா

அனலைதீவு 1ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வைத்தியலிங்கம் யோகம்மா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 27 செப்டம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வைத்தியலிங்கம் யோகம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



24 செப் 2022 சனிக்கிழமை மஹாலய உபயமாக யாழ். வண்ணை ஶ்ரீ வெங்கடேச வரதராஜப் பொருமாள் கோவில் முன்னாள் தர்மகர்த்தாக்களான திரு V.N. செல்லையா, திரு K.பழனிச்சாமி திரு V.N.C. நாராயணசாமி மற்றும் அவர்களது முன்னோர்கள் நினைவாக அன்னார்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 செப் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி முருகநாதன் நவமணி தம்பதிகளின் செல்வப்புதல்வி மதுரா முருகநாதனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மதுரா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 செப் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் அரவிந் ரவிச்சந்திரன், செல்வி ஹர்சானா ஈஸ்வரன் ஆகியோரது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் திருமண வாழ்வில் இணையும் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



24 செப் 2022 சனிக்கிழமை மஹாலய உபயமாக சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையர்களது நினைவாக கனடாவில் வசிக்கும் அவர்களது பிள்ளைகள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



25 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை மஹாலய உபயமாக மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் முன்னோர்களதும் ஆத்ம சாந்திக்காக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



25 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை யாழ்.புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பத்தினர் தமது முன்னோர்கள் நினைவாகவும் அனைத்து ஆத்மாக்களின் ஆத்ம சாந்திக்காகவும் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



25 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வசந்தரா யோகராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வசந்தரா யோகராஜா அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வசந்தரா யோகராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வசந்தரா யோகராஜா அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வசந்தரா யோகராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வசந்தரா யோகராஜா அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை ஊரெழவைச் சேர்ந்தவர்களான திரு திருமதி சின்னப்பு சிவபாக்கியவதி இணையர்களது நினைவாகவும் ஆத்மசாந்திக்காகவும் அன்னாரது குடும்பத்தினர் மஹால உபயமாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




25 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை மஹலய உபயமாக கனடாவில் வசிக்கும் திருமதி சரோஜினி ஶ்ரீரங்கநாதன் குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 செப் 2022 வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த அமரத்துவமாது திருமதி குமரேசு நீலாயதாட்சி அவர்களது 100வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய நாளுக்காக அவரது பிள்ளைகள் 26 செப் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



27 செப் 2022 செவ்வாய்க்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்தவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



27 செப் 2022 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வைத்தியலிங்கம் யோகம்மா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி விஜிந்தன் சோபிதா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services





முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
திருமதி நவநாதன் துஷி
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரி
இன்னிசை மாலையும் இரா
அரவிந்தனின்






இசையில்
சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,
ஹரிகரசுதன்
மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்
இணைந்து வழங்கும்
ஹரி
இன்

OCTOBER 23 2022
SUN @ 6:00PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST, SCARBOR
(FINCH & KENNEDY)

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com

#1 RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX Excel Realty Ltd., Brokerage

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counselling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
RBC Royal Bank Desjardins Manulife Foresters

தொடர்பு
ஈழநாடு பரமேஸ்
தயவு செய்து நுழைவுச்சீட்டு
நிகழ்வுகள் சரியாக மாலை 6
தங்கள் ஆதர

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும் சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
309-80 Corporate Dr
Scarborough, ON
Mississauga Branch
45-2395 Derry Road
Mississauga, ON
Tel: 416-439-0224
Fax: 416-439-0226

Tekon
Banquet services & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2150

வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்



...யந்தி நினைவரங்கத்தில்
...ரிகை 10வது ஆண்டாக நடாத்தும்

# ...ப்போசன விருந்தும் 2022





சுப்பர் சிங்கர் புகழ்
**புண்யா**

...ிரைப்பட பாடகர்
**...ிஹரசுதன்**

# ...ன்னிசை மாலை

அன்பளிப்பு:
...ROUGH VVIP: $200, VIP: $100
https://eelanadu.ca/dinner-and-music/

...களுக்கு:
... - 416.841.9600
...டன் மண்டபத்திற்கு வரவும்.
...:00 மணிக்கு ஆரம்பமாகும்.
...ுக்கு நன்றிகள்

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)

VASANTHAM SUPERMARKET
VASANTHAM SUPERMARKET
SRI LANKAN, INDIAN & MULTINATIONAL GROCERIES
மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்க்கெட்
இலங்கை, இந்தியா மற்றும் பல்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585

WEXFORD WELLNESS CARE INC
✓ MASSAGE THERAPY
✓ PHYSIOTHERAPY
✓ ORTHOPAEDIC
✓ ACUPUNCTURE
✓ CHIROPRACTIC
✓ ORTHOTICS
301-240 Alton Towers Circle,
Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

Proudly Canadian Since 1983
Jyothi
அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



உ
சிவமயம்

திரு. திருமதி பாலச்சந்திரன்
தம்பதிகளின் புதல்வியும்
குரு சதங்கை நர்த்தகி ஸ்ரீமதி ஜெனனி குமார்
அவர்களின் மாணவியுமான
செல்வி அபிராமி பாலச்சந்திரன்
அவர்களின்
பரதநாட்டிய அரங்கேற்றம்

With the blessings of the Almighty Lord Shiva
together **Mr & Mrs Balachandran & Guru Smt. Jenani Kumar**
humbly request the honour of your presence at the

## *Bharathanatya Arangetram*

of their daughter

## Kumari Abirami Balachandran

Disciple of "Sathankai Marthaki"

### Smt. Jenani Kumar

founder & artistic director of
Shilompoli Shethra Dance Academy,
Toronto, Canada

held on **Saturday, October 1st, 2022**
at the Meadowvale Theatre
**6315 Montevideo Rd, Mississauga,**
**ON L5N 4G7**

Seating at 5:00pm
Arangetram will commence at 5:30PM

Contact Guru: 647-338-7850
Vano: 437-580-9333





# நினைவு நாட்களுக்கு உரிமை கோருவது?






கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பை குறித்த உரையாடல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டன. ஆனால் ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் தமிழ்ப் பரப்பில் இருக்கும் அரசியல் செயற்பாட்டாளர்கள் பொருத்தமான வெற்றிகளை இதுவரை பெற்றிருக்கவில்லை. அனைத்து நினைவு கூர்தல்களுக்குமான ஒரு பொதுக் கட்டமைப்பை ஏன் உருவாக்க முடியவில்லை?

ஏனென்றால் ஒரு பொதுவான தியாகிகள் நினைவு தினம் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு அமைப்பும் தனக்கென்று தனியாக தியாகிகள் தினங்களை வைத்திருக்கின்றது. நினைவு நாட்களை வைத்திருக்கின்றது. இதில் ஒரு இயக்கம் தியாகி என்று கூறுபவரை மற்றொரு இயக்கம் துரோகி என்று கூறும் நிலைமையும் உண்டு.

ஒரு இயக்கத்தால் தியாகியாக கொண்டாடப்படுகிறவர் மற்றொரு இயக்கத்தால் கொலைகாரராக பார்க்கப்படுகிறார்.எனவே இயக்கங்களுக்கிடையிலான ஒரு பொதுவான தியாகிகள் நாளை இன்று வரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதை என்றோ ஒரு நாள் கண்டு பிடிக்கும் பொழுது தான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக இதயம் அதன் முழுமையான செழிப்பை அடையும்.

தியாகிகள் நாள் மட்டுமல்ல, இனப்படுகொலை நாளில் கூட சர்ச்சைகள் உண்டு. மே 18 எனப்படுவது தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாள். எனவே அந்த நாளை இனப்படுகொலை நாளாக அனுஷ்டிக்க வேண்டும் என்று தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள். ஒரு குறுகிய கால கட்டத்தில் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் அதிக தொகையினர் கொல்லப்பட்டதன் மூலம் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட ஒரு நாள் என்ற அடிப்படையில் அந்த நாளை இனப்படுகொலை நினைவு நாளாக அனுஷ்டிக்கலாம் என்று கருதுபவர்கள் உண்டு. ஆனால் அங்கேயும் சர்ச்சைகள் உண்டு. அந்த நாளில் புலிகள் இயக்கத்தின் பிரதானிகள் பலர் தம் உயிர்களை துறந்தனர் என்ற அடிப்படையில் அதுவும் கூட புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களில் ஒன்று தான் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லாத் தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொதுவான நினைவு நாளை கண்டு பிடிப்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை. அவ்வாறு ஒரு பொதுவான நினைவு நாள் இல்லாத ஒரு சமூகத்தில், நினைவு கூர்தலுக்காக ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்குவதும் சாத்தியமில்லை. பதிலாக அவரவர் அவரவருடைய தியாகிகள் நாளை அனுஷ்டிப்பது என்ற அடிப்படையில் நினைவு கூர்தலில் பல்வகைமையை ஏற்றுக் கொள்வது தான் உடனடிக்கு சாத்தியமான ஒன்று.

மேலும், கடந்த 13ஆண்டுகளாக நினைவு கூர்தல் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகள் யாவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட நினைவு நாட்கள் தான். விடுதலைப்புலிகள் அல்லாத இயக்கங்களின் நினைவு நாட்கள் பொறுத்து பெரியளவில் சர்ச்சைகள் இல்லை.

இது எதை காட்டுகின்றது என்றால், புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசு யார் என்ற ஒரு போட்டி தான். அல்லது அந்த இயக்கத்தின் வீரத்துக்கும் தியாகங்களுக்கும் யார் உரிமை கோரலாம் என்ற ஒரு போட்டிதான். இந்தப் போட்டி காரணமாகத் தான் கடந்த 13ஆண்டுகளாக நினைவுகூர்தல் தொடர்பாக சர்ச்சைகள் எழுகின்றன. இதில் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் பெரும்பாலானவை விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கானவை தான். அவ்வாறான ஒரு பொதுக் கட்டமைப்பு இல்லாத ஒரு பின்னணியில் தான் இப்பொழுது மறுபடியும் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு அரசியல்வாதிகள் தங்களுக்கிடையே பிடுங்குப்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சர்ச்சை வரும் என்பதனை ஏற்கனவே எதிர்பார்த்த அரசியற் செயற்பாட்டாளர்கள் சிலர் இதில் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளையும் அணுகினார்கள். குறிப்பாக இந்த சர்ச்சைகளின் மையமாகக் காணப்படும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு அணிகளையும் அணுகினார்கள்.

புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான பஷீர் காக்கா இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனோடு உரையாடினார். தான் மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் தமது அமைப்பின் பேச்சாளர் சுகாசுடன் உரையாடும் படியும் கஜேந்திரன் சொன்னார். எனினும், இது தொடர்பாக அக்கட்சியின் உறுப்பினரும் திலீபனோடு நேரடியாகப் பழகியவருமான பொன் மாஸ்ரரோடு உரையாடுவது அதிகம் பொருத்தமாக இருக்கும் என்று பஷீர் காக்கா கருதினார் போலும். எனவே அவர் பொன் மாஸ்டரிடம் இது தொடர்பாக உரையாடியிருக்கிறார். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட உடைவு நினைவு கூர்தலில் பிரதிபலிப்பதை அவரைப் போன்ற செயல்பாட்டாளர்களால் தடுக்க முடியவில்லை. மாறாக அரசியல்வாதிகள் பஷீர் காக்காவை போன்ற மூத்த செயற்பாட்டாளர்களை அவமதிக்கும் ஒரு நிலைமை தான் உருவாகியது.

முரண்பாடு பொதுவெளியில் வந்த பின்னர் தான் மணிவண்ணன் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கினார். முரண்பாட்டின் பின் உருவாக்கப்பட்டபடியால் அது முரண்பாட்டின் ஒரு விளைவாகவே பார்க்கப்படும். மாநகர முதல்வர் என்று அடிப்படையில் மணிவண்ணன் அதனை உருவாக்கிய போதிலும், அப்பொதுக் கட்டமைப்பு சுயாதீனமானது என்று அதைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். அது திலீபன் நினைவு நாட்களை சுயாதீனமாக நினைவுகூரும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் கஜேந்திரகுமார் அணியைச் சேர்ந்த பொன் மாஸ்டர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்களை வைத்துப் பார்த்தால், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட பிளவு திலீபனின் நினைவு நாட்களில் பிரதிபலிக்கிறது என்றே தெரிகிறது. அது மட்டுமல்ல கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்மக்கள் ஒரு பொதுவான நினைவுகூரும் கட்டமைப்பை உருவாக்குவது எத்துணை சவால்கள் மிகுந்தது என்பதனை நிரூபிப்பதாகவும் அது காணப்படுகிறது. ஆயுத மோதல்களுக்கு பின்னரான கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்ச் சமூகமும் அதன் அரசியலும் பண்புருமாற்றம் **trans formation** ஒன்றுக்கு போகமுடியாது தியங்குவதையும் அது காட்டுகிறது.

தமிழ்மக்கள் முழு உலகத்தையும் திரும்பி பார்க்க வைக்கும் ஓர் ஆயுதப் போராட்டத்தை நடாத்திய மக்கள். ஆயுதப் போராட்டம் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக்கும். ஆயுதம் ஏந்தியவர்கள் மட்டுமல்ல,அந்தப் போராட்டத்தை ஏதோ ஒரு விதத்தில் ஆதரித்தவர்கள் எல்லாருக்கும் அதில் கூட்டுப்பொறுப்பு உண்டு. இதில் என்னுடைய கை சுத்தம், உன்னுடைய கையில் இருப்பது ரத்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தியாகி — துரோகி என்ற அளவுகோள்கள் ஊடாக அரசியலைத் தொடர்ந்தும் அணுக முடியாது. நான் தியாகி, நீ துரோகி என்று வகிடுபிரிக்க வெளிக்கிட்டால் சமூகம் என்றைக்குமே ஒரு திரட்சியாக இருக்க முடியாது. அதாவது தமிழ்மக்களை ஒரு தேசமாக கட்டியெழுப்பவே முடியாது.

இதில் தங்களை தியாகிகளாக காட்டிக் கொள்பவர்கள் அல்லது கடந்த காலத் தியாகங்களுக்கும் வீரத்திற்கும் உரித்து கொண்டாடுபவர்கள் முதலில் அந்த வீரத்தின் தொடர்ச்சியும் தியாகத்தின் தொடர்ச்சியும் தாங்களே என்பதனை நிரூபித்துக் காட்டவேண்டும்.

அதை நிரூபிக்கும் இடம் நினைவு கூர்தல் அல்ல. மாறாக கடந்த 13 ஆண்டு கால அரசியலில் தமது சொத்துக்களை இழப்பதற்கும் ரிஸ்க் எடுப்பதற்கும் எத்தனை பேர் தயாராக இருந்தார்கள் என்பதிலிருந்து தான் அதை மதிப்பிடலாம். திலீபனை நினைவு கூர்வது என்பது நல்லூரில் இருக்கும் நினைவுத் தூபியில் சிவப்பு மஞ்சள் கொடியை கட்டுவது மட்டுமல்ல, விளக்குகளை ஏற்றுவது மட்டும் அல்ல, அது அதை விட ஆழமானது. திலீபனைப் போல தமது அரசியல் இலக்கை அடைவதற்காக உயிரைத் துறக்கத் தயாரான எத்தனை அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு? ஒருவர் முன்வரட்டும் பார்க்கலாம்

இது தான் பிரச்சினை. தியாகத்துக்கும் வீரத்துக்கும் உரிமை கோரும் அரசியல்வாதிகள் கடந்த 13ஆண்டுகளாக எத்தனை தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்? எத்தனை பேர் சட்ட மறுப்பாகப் போராடி சிறை சென்றிருக்கிறார்கள்? எத்தனை பேர் சொத்துக்களை துறந்திருக்கிறார்கள்?

கடந்த 13ஆண்டுகளில் காணாமல் போனவர்களின் அம்மாக்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை அரசியல் செயற்பாட்டாளர்கள் சாக விடவில்லை. இவை தவிர அரசியல்வாதிகள் என்று பார்த்தால் யாருமே அந்தளவுக்கு துணியவில்லை.

அதற்காக அரசியல்வாதிகள் சாக வேண்டும் என்று இக்கட்டுரை கேட்கவில்லை. உயிரைக் கொடுத்தது போதும். இனி உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய காலம்.எனவே ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான ஒரு அரசியலுக்குரிய பண்புருமாற்றத்திற்கு தமிழ்மக்கள் தயாராக வேண்டும். நான் வண்ணாத்து பூச்சி, நீ மசுக்குட்டி என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் எல்லா வண்ணாத்துப் பூச்சிகளும் ஒரு காலம் மயிர்க்கொட்டிகளாக இருந்தவை தான்.

இந்த விடயத்தில் தமிழ்மக்கள் தென்னாபிரிக்காவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். தென்னாபிரிக்காவில் வெவ்வேறு ஆயுத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மாறி மாறி ஒருவர் மற்றவரை கொன்றிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பழி வாங்கும் உணர்ச்சியோடு ஒருவர் மற்றவரைத் தண்டிக்க முற்பட்டிருந்திருந்தால் தென்னாபிரிக்கா தொடர்ந்தும் இறந்த காலத்திலேயே வாழ வேண்டியிருந்திருக்கும். ஒரு புதிய காலத்துக்கு வந்திருக்கவே முடியாது. இது விடயத்தில் தென்னாபிரிக்காவை இறந்த காலத்திலிருந்து புதிய காலத்துக்கு அழைத்து வரத் தேவையான பண்புருமாற்றத்திற்கு மண்டேலா தலைமை தாங்கினார்.

ஈழத்தமிழ் அரசியலிலும் இறந்த காலத்தில் இருந்து ஒரு புதிய காலத்தை நோக்கி செல்வதற்கான பண்புருமாற்றம் தேவை. தனது அரசியல் எதிரியை துரோகி ஆக்குவதால் யாரும் தியாகி ஆகி விட முடியாது. தியாகம் செய்தால் தான் தியாகியாகலாம். தனது அரசியல் எதிரியைத் துரோகியாக்குவது என்பது தமிழ்ச் சமூகம் பண்புருமாற்றத்துக்கு தயாரில்லை என்பதைத் தான் காட்டுகின்றது. பண்புருமாற்றத்துக்கு தயாரில்லை என்று சொன்னால் கூட்டுக் காயங்களோடும் பிணங்களோடும் இறந்த காலத்திலேயே வாழ வேண்டியது தான். பழிவாங்கும் உணர்ச்சியால் பிளவுண்டு ஒரு தேசமாக திரட்சியுறாமல் சிதறிப் போவதுதான்.

சில மாதங்களுக்கு முன் பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய கஜேந்திரகுமார் சிங்கள பௌத்த அரசியலானது பண்புருமாற்றத்துக்குப் போக தவறியதன் விளைவே அதுவென்று கூறியிருந்தார் .உண்மை. அது போல தமிழ் அரசியலும் பண்புருமாற்றத்துக்குப் போக வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளில் ஒரு பொதுவான நினைவு நாளையோ அல்லது நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பையோ ஈழத்தமிழர்களால் உருவாக்க முடியவில்லை என்பது தமிழ் அரசியல் தொடர்ந்து பண்புருமாற்றத்திற்கு தயாராக இல்லை என்பதைத் தான் காட்டுகின்றது.

இப்பொழுது திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பானது ஒரு கட்சிக்குள் ஏற்பட்ட உடைவைப் பிரதிபலிக்குமா? அல்லது ஒரு புதிய காலத்தை நோக்கிய பண்புருமாற்றத்தைப் பிரதிபலிக்குமா?




பரத நாட்டிய வகுப்புகள்

**BARATANATYAM CLASS**



அதிஸ்ர லயா நாட்டியப் பள்ளி

**Athishta Layaa Naddiya Palli**

ஆசிரியர்: திருமதி பிரியா உதயன்

Teacher : Priya Uthayan - B.A

(தாய்நாட்டில் 25 வருடத்திற்கு மேலான அனுபவம்)

"அரசாங்க நியமனம் பெற்ற ஆசிரியர்"
இலங்கை.

"National Board Certified Classical
Dance Teacher in Srilanka"
With Over 25 Years of Experience

ஆரம்பம் முதல் ஆசிரியர் தரம் வரையான செயன்முறை, அறிமுறை பயிற்சிகள் முறையாகக் கற்பிக்கப்படும்

அனைத்து தரத்தினருக்குமான புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பம்

**Brimley / Lawrence -Scarborough**

"Diploma in Dance Baratanatyam"
(University of Jaffna)
(Ramanathan Academy in Fine Arts)

"Teacher's Grade"
(North Ceylon Oriental Music Society)
N.C.O.M.S.

"External Degree of Baratanatyam"
(University of Jaffna)

"Kalaavithagar"
(North Ceylon Oriental Music society)
N.C.O.M.S.

Contact:
416-897-5816
647-945-7212

"நாட்டியக்கலைமணி"
யாழ். பல்கலைக்கழகம்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்
யாழ்ப்பாணம்

"ஆசிரியர் தரம்"
வட இலங்கை சங்கீத சபை,
யாழ்ப்பாணம்

"நுண்கலைமாணி"
(நடனம்-பரதம்)
வெளிவாரிப் பட்டதாரி
யாழ். பல்கலைக்கழகம்

"பரத கலா வித்தகர்"
வட இலங்கை சங்கீத சபை,
யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு:
647-975-7453





# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : **416-321-6104**



## MEMBERS ANNUAL GENERAL MEETING 2022

The 27th Annual General Meeting will be held on
Saturday October 01, 2022 from 10 am to 1pm.
**Time :- 10 am to 1 pm on 01/Oct/2022 Saturday**
**Place :- Canada Sri Ayyappa Temple**
Elections for 4 New Board of Directors for 2022,
will be held on Saturday Oct 29th 2022.
**Time :- 10 am to 2 pm on 29/Oct/2022 Saturday**
**Place :- Canada Sri Ayyappan Temple Hall**

**முக்கிய அறிவித்தல் :- அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் 2022**

அன்புடையீர்!
ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தின் 27வது பொதுக்கூட்டம், ஐப்பசி 01, 2022 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் 1 மணிவரை இடம்பெறும்.
காலம் :- 01/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 1 மணிவரை
இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்
புதிய நான்கு நிர்வாகிகளுக்கான தேர்வு ஐப்பசி 29ம் திகதி சனிக்கிழமை (29/10/2022) காலை 10 மணி தொடக்கம், பகல் 2 மணிவரை இடம் பெறும்.
காலம் :- 29/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 2 மணிவரை
இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்
மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்
416.321.6104, 416.321.7558

*அறங்காவலர் சபையினர்*

# தேசிய சபையும் தோல்வியா? பலமடையும் ராஜபக்ஷாக்கள்!

தேசிய சபை என்ற பெயரில் அரசியல் கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய சபை ஒன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த முயற்சி பிசுபிசுத்துப் போயுள்ளது. எதிர்க்கட்சிகள் அனைத்துமே இதில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்து விட்ட நிலையில், தேசிய சபை என்பது தற்போதைய அமைச்சரவையைப் போல பொது ஜன பெரமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக மட்டும் தான் இருக்கப் போகின்றது.



இலங்கையில் அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்திய அரகலய எனப்படும் காலி முகத்திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கைகளில் ஒன்றை நிறைவேற்றுவதாகக் கூறித் தான் இதனை அரசாங்கம் இப்போது அமைக்கிறது. பாராளுமன்றத்துக்கு வெளியால், நாட்டின் நிர்வாகம் உட்பட முக்கிய பொறுப்புக்களை நிர்வகிக்கக்கூடிய சபை அல்லது அமைப்பு ஒன்று அவசியம் என்ற கருத்து அரகலய இளைஞர்களால் முன் வைக்கப்பட்டது.



பாராளுமன்றத்தில் நம்பிக்கை இழந்த நிலையில் தான் இந்தக் கோரிக்கை அவர்களால் முன் வைக்கப்பட்டிருந்தது. அரகலய இளைஞர்களையும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இவ்வாறான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பாக இருந்தது. அரசாங்கத்தை கண்காணிப்பது முக்கிய விடயங்களில் வழி நடத்துவது போன்றன இவர்களுடைய பணியாக இருக்க வேண்டும் என்ற கருத்துடன் தான் இந்தக் கோரிக்கை அவர்களால் முன் வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆரம்பத்தில் கணக்கில் எடுக்கவில்லை. இப்போது அரகலய போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டு பலீனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை நடைமுறைக்குக் கொண்டு வர ரணில் திட்டமிட்டமைக்கு வேறு காரணங்கள் உள்ளன.

வரலாற்றில் என்றுமே காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் இலங்கையைக் காப்பாற்ற வெளிநாட்டு உதவிகள் தான் இன்று அவசியமாக உள்ளன. இலங்கையில் இருக்கக்கூடிய அரசாங்கம் ஸ்திரமற்றதாகவும், ஆட்டம் காணும் ஒன்றாகவும் இருக்கும் நிலையில் வெளிநாடுகளின் உதவிகளைப் பெருமளவுக்கு எதிர்பார்க்க முடியாது. வெளிநாடுகளும் பிரதானமாக அதனைத் தான் எதிர்பார்க்கின்றன. அதனைத் தான் வலியுறுத்துகின்றன. அதாவது, ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இருந்தால் தான் நிதி உதவிகளை வழங்க முடியும் என அவை நிபந்தனை விதிப்பதில் உள்ள நியாயத்தை புறக்கணித்து விட முடியாது.

ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக இருக்கும் நிலையில் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பது கடினமானது. ராஜபக்ஷக்களின் பாராளுமன்றப் பெரும்பான்மையில் தான் ரணில் தங்கியிருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதனையும் பெரும்பாலான மேற்கு நாடுகள் விரும்பவில்லை. எதிர்க்கட்சிகளை வெளியே ஆர்ப்பாட்டங்களைச் செய்வார்கள் மக்களைத் தூண்டி விடுவார்கள் என்பது பொதுவான கருத்து.

குறிப்பாக பொருளாதார நெருக்கடி என்ற நோய்கான மருந்து மிகவும் கசப்பானதாகத் தான் இருக்கும். வரிகள் அதிகரிக்கும், வற் வரி அதிகரிக்கும், இறக்குமதித் தீர்வை அதிகரிக்கும். இது போன்ற நிலைமைகளை ஏற்கனவே இலங்கை மக்கள் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். இவ்வருட ஆரம்பத்தில் 65 ரூபாவுக்கு விற்பனையான பாண் இப்போது 200 ரூபாவை தாண்டி விட்டது. விரைவில் 500 ரூபாவைத் தாண்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாண் மட்டுமல்ல அத்தியவசியப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் இவ்வாறு அதிகரிக்கின்றது. அதிகரிக்காமல் இருப்பது மாத வருமானம் ஒன்று தான்.

அரகலய போராட்டத்துக்கு அடிப்படையாக இருந்த காரணங்களில் இந்த விலைவாசி உயர்வும் ஒன்று. இப்போது ஒரு நேர இரு நேர உணவைத் தவித்துள்ள மக்கள் இந்த நிலையில் மீண்டும் வீதிக்கு இறங்குவது எதிர்பார்க்கக்கூடிய ஒன்று தான். இவ்வாறான நிலையில், அதனை எதிர்க்கட்சிகள் பயன்படுத்த முற்படுவார்கள். அவர்களது அரசியலுக்கு அது தான் முதலீடு. அவர்கள் அதனைப் பயன் படுத்தாமல் தடுக்க வேண்டுமானால் அவர்களையும் அரசின் பங்காளிகளாக்கி விட வேண்டும்.

அந்த உபாயத்துடன் தான் முதலில் சர்வகட்சி அரசாங்கம் என ரணில் முயற்சிகளை முன்னெடுத்தார். அரசின் பங்காளிகளாகி விட்டால் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்ய முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்குத் தெரியாததல்ல. அதனால், வேறு காரணங்களைச் சொல்ல அதனைத் தட்டிக் கழித்தார்கள். அதனையடுத்து தேசிய அரசாங்கம் அமைக்கப் போவதாக ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்தார்.. அதுவும் தோல்வியடைந்தது. பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பன அரசில் இணைந்து தமது எதிர்கால அரசியலை பாளாக்க விரும்பவில்லை.

இந்த நிலையில் தான் அடுத்த தெரிவாக தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை ரணில் ராஜபக்ஷ கூட்டணி முன்னெடுக்கின்றது. தேசிய சபையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு மட்டுமே இடமளிக்கப்படும் என்பதால் அதுவும் மற்றொரு அமைச்சரவை போலவே இருக்கப் போகின்றது. பிரதான எதிர்க் கட்சிகளும், சிறுபான்மையினக் கட்சிகளும் இதனைப் புறக்கணிப்பது என்பதில் உறுதியாகவுள்ளன.

**கட்டுரையாளர்:**
யாழ்ப்பாணத்தில் இருந்து
– ஈழநாட்டிற்காக பார்த்தீபன் –

தேசிய பேரவைக்கான உறுப்பினர்களின் பெயர;கள் கடந்த 23 ஆம் திகதி சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது. தேசிய பேரவையில் இடம் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ள நிலையில், தமது அனுமதியின்றியே பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னனியில் ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் மட்டும் தான் இந்த தேசியப் பேரவை இருக்கப் போகின்றது. அதாவது இது மற்றொரு அமைச்சரவை போலத்தான் இருக்கப் போகின்றது. ஏற்கனவே ராஜபக்ஷக்களின் அழுத்தங்களால் 38 பேருக்கு இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 12 எம்.பி.க்களுக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என ராஜபக்ஷக்கள் அழுத்தம் கொடுக்கின்றார்கள். தற்போது பிலிப்பைன்ஸில் விஜயத்தை மேற் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு திரும்பிய பின்னர் எதிர் கொள்ளப் போகும் மிகப்பெரிய தலையிடி இது!

இந்தப் பின்னனியில் இந்த தேசிய பேரவை எதனைச் சாதிக்கப்போகின்றது? அல்லது அதனால் எதனைச் சாதிக்க முடியும்? யாருடைய நலன்களுக்காக இந்த தேசிய பேரவை அமைக்கப் படுகின்றது? இவை தான் மக்கள் மத்தியில் எழுகின்ற கேள்வி!

## திலீபனை நினைவேந்தியவர்களை சிறைகளில் அடைக்க வேண்டும்!

# முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சீற்றம்!

மரணித்த விடுதலைப் புலிகள் அமைப்பின் பயங்கரவாதியான திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகச் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என அரசிடம் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்த போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த நாட்டில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் இருந்து மரணித்தவர்களை யாராவது பகிரங்கமாக நினைவுகூர்ந்தால் அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.


மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு – கிழக்கில் 12 நாட்கள் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்தியுள்ளார்கள். திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனிகளும் வீதிகளில் வலம் வந்துள்ளன என்றும் தெரிவித்த விமல் வீரவன்ச, சிங்கள மக்களைச் சினமூட்டும் வகையில் தமிழ் மக்களும், தமிழ் அரசியவாதிகளும் நடந்து கொண்டுள்ளார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

சமூக வலைத்தளங்களில் கூட திலீபனைத் தமிழ் இளைஞர்கள் நினைவேந்தியுள்ளார்கள் இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

இதேவேளை பயங்கரவாதியான திலீபனை நினைவேந்தி வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிகழ்வுகளைப் பகிரங்கமாகப் பெருமெடுப்பில் நடத்துகின்றனர். ஆனால், அதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அரசும், படையினரும், பொலிஸாரும் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். என்று சாடியுள்ளார் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிரிழந்தாலும் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மறக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். திலீபனின் இந்த நினை வேந்தல் நிகழ்வு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் கருத்து என்ன? வடக்கு, கிழக்கில் இம்முறை திலீபனின் நினைவேந்தலைப் பெருமெடுப்பில் நடத்த யார் அனுமதி வழங்கியது? என்றார்.

# "மிர்" இலங்கைக்கு புதிய தலைவலி!



பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது.

ரஷ்யாவைக் கை விடவும் முடியாமல், அமெரிக்காவின் பக்கம் முழுமையாகச் செல்லவும் முடியாத இக்கட்டான நிலை இலங்கைக்கு உள்ளது.

இந்த இரட்டை நிலையால் இலங்கை இன்னமும் பல்வேறு குழப்பங்களை எதிர்கொண்டு வருகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் உடனடியான நெருக்கடியில் வீழ்ந்தமைக்கு, சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சியடைந்ததும் ஒரு காரணம்.

கொரோனா நெருக்கடியினால் வீழ்ச்சியடைந்த சுற்றுலாத் துறையை ரஷ்யா, உக்ரேன் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம், மீளக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த போது தான், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு ஆரம்பித்தது. அத்துடன் ரஷ்யா மீது சர்வதேச தடைகள் விதிக்கப்பட, உக்ரைனில் போர் நெருக்கடி ஏற்பட இரண்டு நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தடைப்பட்டது.

ரஷ்யாவில் இருந்து குறைந்தளவு சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருந்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரஷ்யாவின் 'ஏரோ புளொட்' விமானம் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து அந்த நிறுவனம் சேவையை நிறுத்திக் கொண்டது.

இதனால், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை மிக மோசமாக குறைந்து போனது. இது நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சத்தை எட்டுவதில் முக்கிய காரணியாக இருந்தது.

தற்போது, பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கும் அரசாங்கம், அதற்காக ரஷ்யாவுடன் தொடர்புகளை வலுப்படுத்தவும் தயாராக உள்ளது.

சர்வதேச தடைகளால் ரஷ்யாவினால் எண்ணெய், எரிவாயு, நிலக்கரி போன்றவற்றை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அதேவேளை, இலங்கையினால், எண்ணெய், எரிவாயு போன்றவற்றுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை நீடிக்கிறது.

இந்த நிலையில், ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலைக்கு எண்ணெய், எரிவாயு போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது. அத்துடன், மீண்டும் ரஷ்யாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை கொண்டு வருவதற்கும் ரஷ்யாவிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருக்கிறது.

ஏரோ புளொட் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டதற்கு ரஷ்யாவிடம் மன்னிப்புக் கோரியுள்ள அரசாங்கம், இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம் பெறாது எனவும் உறுதி கூறியிருக்கிறது.

அதேவேளை ரஷ்யாவின் மிகப்பெரிய வாடகை விமான சேவை நிறுவனமான, அசுர் எயர், வரும் டிசெம்பரில் இருந்து சேவையை ஆரம்பிக்க இணங்கியிருக்கிறது. இதன் மூலம், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு கொண்டு வர முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது.

இலங்கையின் மீது கொண்ட பற்றுதலால் அல்லது, இலங்கைக்கு உதவுகின்ற நோக்கத்துடன் மாத்திரம் ரஷ்யா இதற்கு இணங்கவில்லை. தன் மீதான தடைகளை உடைப்பதற்கும், அமெரிக்காவுக்கு மாற்றான பொருளாதார ஒழுங்கு ஒன்றை வடிவமைக்கும் முயற்சிக்கும் இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ள ரஷ்யா முற்படுகிறது.

வர்த்தகம் என்பது எப்போதும் இருபக்க நலன் சார்ந்த ஒன்று. அதில் அனுதாபத்துக்கு இடமில்லை. சீனாவைப் போலவே ரஷ்யாவும் அதில் தெளிவாக இருக்கிறது.

உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து, ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் விதித்திருக்கின்றன.

மேற்குலகின் எதிர்நடவடிக்கைக்கள், ரஷ்யாவை கடுமையாகப் பாதித்திருக்கிறது. உக்ரேன் போருக்கு மேற்குலகம் வழங்கும் உதவிகளும், ரஷ்யாவை முடக்குவதற்கு எடுக்கின்ற நடவடிக்கைகளும் ரஷ்யாவுக்கு மோசமான பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த புதன்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொலைக்காட்சியில் நிகழ்த்திய உரையில், மேற்குலகத்தின் மீதான கடும் வெறுப்பை கொட்டித் தீர்த்திருந்தார்.

மேற்குலகின் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீள நிலைப்படுத்துவதற்காக, அமெரிக்காவை மையப்படுத்திய டொலரை அடிப்படையாக கொண்ட வங்கி அட்டைப் பரிமாற்ற முறைக்கு மாற்றாக, ரஷ்யா தனது மிர் வங்கி அட்டைகள் மற்றும் பரிமாற்ற முறையை ஏற்றுக் கொள்ளுமாறு உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

அண்மையில் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய அமைச்சர் பந்துல குணவர்த்தன, சில நாட்களுக்கு முன்னர் செய்தியாளர் சந்திப்பில் ரஷ்யாவின் மிர் வங்கி அட்டை முறையை ஏற்றுக் கொள்ளுமாறு, ரஷ்யா கோரியிருப்பதை உறுதிப்படுத்தியிருந்தார்.

ரஷ்யாவின் மிர் வங்கி அட்டை முறையை பல நாடுகள் அங்கீகரித்துள்ளதாகவும், அதனை இலங்கை அங்கீகரிப்பதன் மூலம், பல்வேறு பொருளாதார நலன்களை பெறமுடியும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இலங்கைக்கான ரஷ்ய விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதற்கான ஒரு முன் நிபந்தனையாக மிர் அட்டையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம், எடுக்கப் போகும் முடிவு தான் அது சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ளுமா என்பதை தீர்மானிக்கும். ரஷ்யாவின் மிர் வங்கி அட்டையை ஏற்றுக் கொண்டால் அது மேற்குலகின், குறிப்பாக அமெரிக்காவின் கோபத்துக்கு உள்ளாகும் நிலையை ஏற்படுத்தும்.

ரஷ்யாவின் மிர் பணம் செலுத்தும் வலையமைப்புடன், ஒப்பந்தங்களில் ஈடுபடும் அமெரிக்காவிற்கு வெளியே உள்ள வங்கிகள் அமெரிக்க தடைகளைத் தவிர்ப்பதற்கான ரஷ்யாவின் முயற்சிகளை ஆதரிப்பதாக கொள்ளப்படும் ஆபத்து உள்ளதாக, அமெரிக்க திறைசேரி திணைக்களம் அண்மையில் எச்சரித்திருக்கிறது.

இதையடுத்து, ரஷ்ய மத்திய வங்கியின் மிர் கொடுப்பனவு முறையை ஏற்றுக் கொண்டிருந்த துருக்கியேவின், இஸ் வங்கி மற்றும் டெனிஸ் வங்கி ஆகியன, அதிலிருந்து விலகிக் கொள்வதாக சில நாட்களுக்கு முன்னர் அறிவித்துள்ளன.

அமெரிக்க தடையை எதிர்கொள்ளலாம் என்பதாலேயே துருக்கிய வங்கிகள் பின் வாங்கியிருக்கின்றன. அமெரிக்காவின் வீசா மற்றும் மாஸ்டர் அட்டை நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்களின் சேவைகளை நிறுத்தியிருக்கின்றன. இதனால் ரஷ்யாவுக்கு வெளியே செல்பவர்கள், நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள்.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



ரஷ்யர்கள் அதிகம் பயணம் செய்யும் நாடுகளில் துருக்கியும் ஒன்று என்பதால், அந்த நாட்டின் ஐந்து வங்கிகள் மிர் அட்டைகளை ஏற்றுக் கொண்டிருந்தன.

அது போலத் தான் இலங்கையையும் ஏற்றுக் கொள்ள வைக்க ரஷ்யா முயற்சிக்கிறது. உலகின் பல நாடுகள் மிர் அட்டைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியிருக்கிறார். ஆனால், அதனை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்த நாடுகளின் எண்ணிக்கை 11 மட்டும் தான்.

அமெரிக்காவின் எச்சரிக்கையை அடுத்து, அவற்றில் நான்கு நாடுகளான ஆர்மேனியா, கசகஸ்தான், துருக்கி, வியட்நாம் என்பன, செப்ரெம்பர் 20ஆம் திகதியுடன் மிர் அட்டை கொடுப்பனவு முறையை இடை நிறுத்தியிருக்கின்றன. (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியமும் சாத்தியமின்மையும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –




1949–ஆம் ஆண்டு இலங்கை தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. தன் ஆங்கிலப் பெயர் சமஷ்டிக் கட்சியாகும். அதாவது, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை காண்பது தான், இலங்கை தமிழரசுக் கட்சியின் இலக்காக இருந்தது. ஆனால் சமஷ்டி அரசியல் தீர்வை ஒரு பாய்ச்சலில் அடைய முடியுமென்று கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஒருபோதுமே நம்பியிருக்கவில்லை.

இதன் காரணமாகத் தான், செல்வநாயகம் பண்டா–செல்வா உடன்பாடு மற்றும் டட்லி செல்வா உடன்பாடு ஆகியவற்றின் மூலம் குறைவான அதிகாரங்களையாவது பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் அந்த குறைவான அதிகாரங்களைக் கூட தருவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் இணங்கவில்லை. இரண்டு ஒப்பந்தங்களும் உதறினம் செய்யப்பட்டன. .ந்தப் பின்புலத்தில் தான் செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி சிந்தித்தார். இதற்கு அன்றைய பிராந்திய அரசியல் சூழலே பிரதான காரணமாக இருந்தது.

1971இல் கிழக்கு பாகிஸ்தான் ஒரு சுதந்திர நாடானது. இதற்குப் பின்னால் இந்தியாவே இருந்தது. பங்களாதேஷின் உருவாக்கம் ஏற்படுத்திய உற்சாகத்திலிருந்து தான், செல்வநாயகம் தமிழ் மக்களுக்கான தனிநாடு தொடர்பில் சிந்திக்கத் தலைப்பட்டார்.

ஏனெனில் 1976 இல் தனிநாட்டுக்கான வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்த செல்வநாயகத்திடம், அதனை அடைவதற்கான எந்தவொரு திட்டமும் இருந்திருக்கவில்லை. நீங்கள் எப்படி தனிநாட்டை அடையப் போகின்றீர்கள் என்று ஒரு ஊடகவியலாளர் கேட்டதற்கு செல்வநாயகம் வழங்கிய பதில், நாங்கள் ஒரு நிலைப்பாட்டை முன் வைக்கின்றோம். அவர்கள் எங்களை வெளியில் விடுவார்கள்.

செல்வநாயகம் அவர்களென்று கூறியது சிங்களவர்களையாகும். ஆனால் செல்வநாயகம் எதிர்பார்த்தது இறுதி வரையில் நடைபெறவேயில்லை. செல்வநாயகம் வழி வந்த தலைவர்கள் எவருமே தனிநாட்டுக் கோரிக்கையில் உறுதியாகவோ, உண்மையாகவோ இருக்கவில்லை . காரணம் அதனை அடையும் வழிமுறையை அவர்கள் அறியவில்லை. அடையும் வழிமுறை தெரியாத ஒன்றின் மீது எவ்வாறு அவர்கள் உறுதியாக இருக்க முடியும்? இந்தியாவிற்கு அவ்வாறானதொரு நோக்கம் இருந்திருந்தால் அது சாத்தியப்பட்டிருக்கும் என்பதே அன்றைய மிதவாதிகளின் புரிதலாக இருந்தது.



ஒரு நேர்காணாவின் போது சம்பந்தன் இந்தத் கருத்தை என்னிடம் கூறியிருந்தார். ஆனால் இலங்கைத்தீவை இரண்டாக உடைக்கும் நோக்கம் இந்தியாவிற்கு இருந்திருக்கவில்லை. ஏனெனில், இலங்கை பாகிஸ்தான் அல்ல. இந்த தெளிவு செல்வநாயகத்திடமும் அன்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடமும் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் எண்ணத்தை காலம் கடந்தே புரிந்து கொண்டனர்.

செல்வநாயகத்தின் மறைவுடன், மிதவாதிகளின் தனிநாட்டுக்கான அரசியல் முற்றுப் பெற்று விட்டது. அதன் பின்னர் தனிநாட்டுக்கான அரசியல் என்பது ஆயுத இயக்கங்களின் அரசியலானது. ஜேஆர்.ஜெயவர்தாவின் வெளிவிவகாரக் கொள்கை காரணமாக இந்தியா அதிருப்தியுற்றது. இந்த பின்புலத்தில் தான், அன்றிருந்த பிரதான 5 இயக்கங்களுக்கும் இந்தியா ஆயுத பயிற்சியளித்தது. இந்த பயிற்சித் திட்டத்திற்




கும் விடுதலைப்புலிகளையும் உள்ளடக்குவதற்காக தான் எவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டேன் என்பதை அன்ரன் பாலசிங்கம், தனது போரும் சமாதானமும் நூலில் விபரித்திருக்கின்றார்.

இந்த பயிற்சித் திட்டம் இந்திய உளவுத்துறையான றோவின் நேரடி கணகாணிப்பின் கீழ் இடம் பெற்றது. இந்தப் பயிற்சியின் போது தான், இயக்கங்களின் தலைவர்கள் அனைவரும் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொண்டனர். அதாவது, இந்தியா தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்காது. இலங்கை விவகாரத்தை கையாள்வதற்காக இந்திராகாந்தியால் நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதியான பார்த்தசாரதி, அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் இந்த விடயத்தை தெளிவாக கூறியிருந்தார்.

அதாவது, இந்தியா உங்களின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்காது, அத்துடன் அனுமதிக்கவும் மாட்டாது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், இந்திய இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்றது. இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்காகவே இந்திய அமைதிப்படைகள் இலங்கையின் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டன. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகளுக்கான தீர்வமாக மாகாண சபை முறைமை முன் வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன் ஒரு கட்டத்தில் இந்தியாவுடன் மோதும் முடிவையும் எடுத்தது. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மறுத்ததன் பின்னணியில் தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தலில் போட்டியிட்டு, இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தை பொறுப்பேற்றது. ஒரு வேளை, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இதனை அன்று செய்யாதிருந்திருந்தால்இன்று மாகாண சபையும் தமிழர்களிடம் இருந்திருக்காது.

இன்றுவரையில் மாகாண சபை ஒன்றை தவிர வேறு எந்தவொரு அரசியல் தீர்வையும் தமிழ் மங்களால் அடைய முடியவில்லை . 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாண சபை முறைமையானது. தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வில்லை என்பதை ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் அறிக்கைகளிலும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் என்போர் கூறிக் கொண்டாலும் கூட, அதனை தாண்டிச் சென்று தீர்வை அடையும் வழிமுறையை எவரும் அறியவில்லை

1976இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய போது, எவ்வாறு தனிநாட்டை அடையும் வழிமுறையை செய்வநாயகம் தலைமையிலான கூட்டணியினர் அறிந்திருக்கவில்லையோ அதே போன்று தான் இன்று சமஷ்டிதீர்வு தொடர்பில் எவருமே, தீர்வை அடையும் வழிமுறையை அறிந்திருக்கவில்லை. தங்களால் எதிர்வு கூற முடியாத விடயங்களையோ, தமிழ் மக்கள் மத்தியில் உச்சரித்து வருகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் தான் அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாக, ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கின்ற, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பலமான அத்தி பாரமாகக் கொண்டிருக்கின்ற, 13ஆவது திருத்தச் சட்டத்தை பயன்படுத்திக் கொண்டு, முன் செல்வது தொடர்பில் பேசப்படுகின்றது. ஈழத் தமிழர் விவகாரம் பேசப்படுகின்ற ஒவ்வொரு சந்தப்பத்திலும் இந்தியா இந்த விடயத்தையே வலியுறுத்தி வருகின்றது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளிலும் இந்த விடயம் தான் கட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இதனை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு பயணிப்பதில் தமிழ் தேசியக் கட்சிகள் என்போர் பின்னடிக்கின்றனர். அவர்களை பொறுத்த வரையில் இந்தியாவின் தலையிடும் தேவை, அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொண்டு பயணிக்கும் விடயத்தில் நிலைப்பாட்டையும் எடுக்க. முடியவில்லை இதற்கு பிரதான காரணம், தாங்கள் ஏற்றுக் கொண்டால் பிறிதொரு தரப்பு தங்களை எதிர்ப்பதற்கு இதனை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்திக் கொள்ளுமென்னும் அச்சமாகும்.

ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமக்கு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியினர், 13ஆவது திருத்தம் சட்டத்தை எதிர்த்து வடக்கின் வீதிகளில் பிரசார நடவடிக்கைகளை மேற்க் 'கொண்டனர். இந்திய எதிர்ப்பு பிரசாரங்களில் ஈடுபட்டனர். இப்போதும் திலீபன், 13 ஆவது திருத்தம் பட்டத்திற்கு எதிராக உண்ணாவிரதமிருந்தது போன்றதொரு பிரசாரத்தை திட்டமிட்டு முன்னெடுக்கின்றானார்.

ஆனால் மாற்றுத் திட்டம் தொடர்பில் எந்தவொரு தெளிவான வேலைத்திட்டமும் அவர்களிடம் இல்லை. தென்பகுதியில் ஜே.வி.பி. மற்றும் குமார் குணாரட்ணம் கட்சி போன்ற இந்திய எதிர்ப்பு அரசியல் கட்சிகளுக்கு சமாந்தரமான இந்திய எதிர்ப்பு அரசியலை தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுப்பதையே காங்கிரஸ் கட்சி பிரதான வேலைத் திட்டமாக மேற்கொண்டு வருகின்றது. இதற்கு எதிராக போவதன் மூலம் அவர்கள் உண்மையிலேயே இந்திய எதிர்ப்பையே முன்னெடுத்து வருகின்றனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகள் தொடர்பில் சேலாம். அதில் தவறில்லை அந்தக் குறைபாடுகளை எவ்வாறு நிவர்த்தி செய்து கொண்டு, அதிலிருந்து முன்னோக்கிச் செல்லலாம் என்பது தொடர்பில் சிந்திப்பதற்கு மாறாக முற்றிலுமான எதிர்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் இவர்கள் தமிழ் மக்கதுக்கு செய்யப் போகும் நன்மை என்ன?

2015ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரான சூழலில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி, அதிலிருந்து முன்னோக்கி பயணிப்பதற்கு முற்றிலும் சாதகமான வாய்ப்பிருந்தது. ஆனால் அதனை சம்பந்தன் செய்யவில்லை. இறுதியில் புதிய அரசியல் யாப்பும் இல்லை சீர்திருத்தமும் இல்லை என்னும் நிலைமையே ஏற்பட்டது. இந்த இடத்தில் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, புதிய அரியம் யாப்பு முயற்சி தோல்வியடைந்தால் சிங்களவர்களுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை, நஷ்டம் தமிழ் மக்களுக்கு மட்டும் தான். இதன் காரணமாகத் தான் இருக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு, முன்னோக்கி பயணிப்பது தொடர்பில் நாம் வலியுறுத்தி வருகின்றோம். எனவே அரசியல் தீர்விற்கான சாத்தியம் இருக்கின்றதா என்று கேட்டால், ஆம் நிச்சயம் இருக்கின்றது.

அதாவது, இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை பயன்படுத்துவதிலிருந்து, படிப்படியாக அரசியல் தீர்வை நோக்கி பயணிப்பது. அரசியல் தீர்விற்கான சாத்தியம் இல்லை என்று கேட்டால் ஆம் நிச்சயம் இல்லை அதாவது, சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை பெறுவதற்கான (22ம் பக்கம் பார்க்க)

# இராசாவின் பேச்சு ஏற்படுத்திய சர்ச்சை

தமிழக அரசியலை பொறுத்தவரை கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக பெரியாரிய சிந்தனைகளை உள்ளடக்கிய திராவிட சித்தாந்தங்களுக்கு மக்கள் பேராதரவு அளித்து, தி.மு.க.வை ஆட்சிக் கட்டிலில் அமர

இவ்வளவு ஏன் திமுகவில் இருக்கும் சில மூத்த நிர்வாகிகளே, ராசாவின் பேச்சுக்கு தங்களின் அதிருப்தியையும், வருத்தத்தையும் தெரிவித்தனர். இதற்கு தன்னுடைய இணைய பக்கத்தில், 'இந்து மதத்தில் ஏற்றத்தாழ்வுகள், வேறு





உருவாக்க வேண்டும் என்ற பா.ஜ.க.வின் நீண்ட நாள் திட்டம் இந்த பேச்சின் மூலம் உடைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அண்ணாதுரை காலத்தில் தி.மு.க. மீது வைக்கப்பட்ட சொலவடை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பா.ஜ.க.விற்கு ஒரு புறம் ஆ.ராசா போன்றவர்கள் மூலம் பதிலடி கொடுக்கப்பட்டாலும், 'சிற்பி', 'காலை உணவு திட்டம்' என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பாமர மக்களின் தேவைகளை துல்லியமாக அவதானித்து, அவர்களுக்கான நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறார். இதனால் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியை மக்களிடத்தில் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கஷ்டப்பட்டு உருவாக்கினாலும், அதனை உடனடியாக நேர்மறையான அதிர்வாக ஸ்டாலின் மாற்றி விடுகிறார்.

தத்துவம் என்பது எவ்வளவு வலிமையானதாக இருக்கிறதோ அதற்கான திட்டமிடுதலும், வழிமுறையும் வலிமையானதாக இருக்க வேண்டும். வலிமையான தத்துவம் மட்டுமே வெற்றியை தராது. அதற்கு வலிமையான வழி முறையும் அவசியம். அந்த வழி

செயல்பாடு நேர்த்தியாகவும், பா.ஜ.க.வின் எண்ணத்தை தவிடுபொடியாக்குவதற்கான வலிமையையும் இருப்பதாக அக்கட்சியின் முன்னணி நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள்.

வட இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தங்களது ஆதிக்கத்தை செலுத்த பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் மற்றும் ஏனைய இந்துத்துவா அமைப்புகள் மேற்கொண்ட பல்வேறு அரசியல் உத்திகள்.. தமிழகத்தில் பிரயோகிக்கப்பட்டபோது, எள்ளளவும் எதிர்பார்த்த விளைவை

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**- குடந்தையான் -**

ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இது தொடர்பாக பா.ஜ.க. முன்வைக்கும் ஒவ்வொரு அரசியல் ரீதியிலான மோதல்களையும், பகுத்தறிவு அரசியலுடனான கருத்தியல் ரீதியாக எதிர்கொண்டு, ஆ.ராசா உள்ளிட்ட தி.மு.க.வின் முன்னணி நிர்வாகிகள் பதிலடி அளிக்கின்றார்கள்.

இதனிடையே தமிழக ஆளுநராக பொறுப்பேற்ற பிறகு ரவி பங்கு பற்றும்

வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக சமூகத்தில் பல்வேறு சாதிகளாக பிரிந்து கிடக்கும் மக்கள் தங்களுக்கான உரிமையை, பெறுவதன் மூலம் முன்னேறிய சமூகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழகத்தில் இன்னும் முன்னேறாத அதாவது வாய்ப்புகளை அதிக அளவில் பெறாத சமூகங்களுக்கும், இந்த வாய்ப்பு கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்திலும் ஒரு தொகுதியினர் இருக்கின்றனர்.

தமிழக ஆளுங்கட்சியான தி.மு.க., 'திராவிட முறைமை' அரசு என்பதை அறிவித்து, 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற சமூகநீதி- சமநீதி வாய்ப்பை முன்னெடுத்து செல்கிறது. இதற்கு மாபெரும் தடைக்கல்லாக முன்னிறுத்திச் செயற்படுகின்றது.

ஆனால் இதனைத் திசை மாற்றுவதற்காக இந்துத்துவா தான் தேசியம் என்ற தத்துவத்தை முன்னிறுத்தி பா.ஜ.க. செயல்படுகிறது. இதற்கு எதிராக கருத்து கூறுபவர்களை கட்டம் கட்டி 'தேசவிரோதி', 'தேசத்துரோகி'என குறிப்பிட்டு அவர்களை புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

இவர்களின் அச்சுறுத்தல் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் ஓரளவுக்கு பலன் அளித்தாலும், பகுத்தறிவு சிந்தனைகள் நீண்ட காலங்கள் ஆதிக்கம் செலுத்தியிருக்கும் தமிழகத்தில் சிறிதளவும் பலனளிக்கவில்லை. இதனால் இவர்களின் ஆத்திரம் இந்துத்துவாவை பற்றியும். இந்து மதத்தை பற்றியும் தவறாக பேசுபவர்கள் மீது திரும்புகிறது.

அண்மையில் தி.மு.க.வின் முன்னணி நிர்வாகிகளில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஆ.ராசா, திராவிடக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் பங்கு பற்றி பேசும் போது, குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பை முன் வைத்து இந்துவாக இருக்கும் வரை நீ சூத்திரன் தான். சூத்திரனாக இருக்கும் வரை பஞ்சவன். இந்துவாக நீ இருக்கிற வரை தீண்டதகாதவன். எத்தனை பேர் வேசியின் மகனாக இருக்க விரும்புகிறீர்கள்? என்ற கேள்வியை உரக்க எழுப்பினால் தான், அது சனாதனத்தை முறியடிக்கும் அடிநாதமாக அமையும் என குறிப்பிட்டிருந்தார்.

ராசாவின் இந்தப் பேச்சுக்கு மத வெறுப்பு அரசியலை இந்தியா முழுவதும் தீவிரமாக திணித்து வரும் பா.ஜ.க. மற்றும் ஏனைய இந்து அமைப்புகள், இதற்கு கடுமையாக எதிர் வினையாற்றின. கண்டனப் போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள், பொலிஸ் முறைப்பாடுகள் என்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். அதுமட்டுமன்றி, பா.ஜ.க.வின் கூட்டணி கட்சியான அதிமுகவும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தமை விசேடமான தொன்றாகும்

பாடுகள் இருக்கிறது. மனுதர்மத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்கு முறைகள் இருக்கிறது. இதனை புரிந்து கொள்ள வேண்டும்' என்று தெரிவித்தார். நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளரான சீமான், ஆராசாவிற்கு ஆதரவாக குரல் கொடுக்க, ராசா மீதான எதிர்ப்பின் வீரியம் குறைய தொடங்கியது. இருப்பினும் இது தொடர்பாக ராசா ஏதேனும் விளக்கமளிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உருவானது.

இவற்றையெல்லாம் மனதில் வைத்து நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய ஆ.ராசா இது தொடர்பாக விளக்கமளித்து பேசுகையில், 'மன்னிப்பு கேட்க வேண்டும் எனப் பலர் விமர்சிக்கிறார்கள். மன்னிப்பு கேட்கக் கூடாது என்று நினைக்கவில்லை. தவறு செய்தவன் மன்னிப்பு கேட்க வேண்டும். அது தான் சிறந்தது. மன்னிப்பு கேட்காத ஆள் அயோக்கியன். மாண்பு உள்ளவன் மன்னிப்பு கேட்பான். நான் மன்னிப்பு கேட்கிறேன். ஆனால் அதற்கு முன் நான் என்ன தவறு செய்தேன்? என்று சொல்லுங்கள்'' என்றார்.

ப.ஜ.க.வை சேர்ந்த திருப்பதி நாராயணன் போன்றவர்கள் நல்லதொரு எதிர்ப்பை பதிவு செய்திருந்தனர். இந்து மதத்தில் வேறுபாடுகள் இல்லை என்று சொல்கிறார். அத்துடன் இந்து மதத்தில் வேறுபாடுகள் இருந்தது உண்மை. அது எல்லாம் பழமை வாய்ந்தது. இப்போது அரசியல் அமைப்பு சட்டம் தான் இருக்கிறது என்று திருப்பதி நாராயணன் கூறுகிறார்.

அவர் முன்வைக்கும் வாதம் நியாயமானதாக தோன்றலாம். ஆனால் அரசியலமைப்பு சட்டப்படி பதவியேற்ற ஆளுநர் ஆர்.என் ரவி, சனாதனம் பற்றி ஏன் பேச வேண்டும்? இதற்கு அவர்கள் விளக்கமும், பதிலும் அளிக்க வேண்டும். அரசியலமைப்பு சட்டம் என்று ஒன்று இருக்கும் போது, அவரால் எப்படி சனாதனம் பற்றி பேச முடியும்? அரசியல் அமைப்பு சட்டம் வந்த பின் மனுதர்மம் இல்லை என்று திருப்பதி நாராயணன் குறிப்பிட்டாரே.. அப்படி என்றால், ஆர்.என்.ரவி பேசியது என்ன? இதற்கு அவர் பதில் சொல்வாரா..? என்று கேள்வி எழுப்புகிறார் ராசா.

ராசாவின் பேச்சு பாஜகவினரை பதம் பார்த்திருக்கிறது. இந்துவிற்கு எதிரியாக தி.மு.க.வை உருவகப்படுத்தி, தமிழகத்தில் இந்து வாக்கு வங்கியை

முறையை ஜனநாயக அரசியல் சக்திகள் உருவாக்க வேண்டும். அதனை அடியொற்றிய இந்தியாவின் வளர்ச்சிக்கு தொலைநோக்குப் பார்வை கொண்ட கூட்டணி அவசியம்'' என்பதை தி.மு.க. தலைவர் ஸ்டாலின் எடுத்துரைத்திருக்கிறார்.

இதன் மூலம் தமிழகத்தில் தி.மு.க.வின்

பல்வேறு விழாக்களிலும், நிகழ்வுகளிலும் சனாதனம் குறித்தும், புதிய கல்விக் கொள்கைக் குறித்தும், ஆரிய மதம் குறித்தும் பல கருத்துகளை தொடர்ந்து பேசி வருகிறார் என்பதும், அவருக்கு ஆ.ராசாவின் பேச்சு சரியான பதிலடி என்பது குறிப்பிடத்தக்கது.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104
"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்!
என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"



புரட்டாதி சனிவார வழிபாடும், தோஷ நிவர்த்தி மஹா யாகமும்
சனி வாரங்கள்: 17.09.2022, 24.09.2022,
01.10.2022, 08.10.2022, 15.10.2022

மெய்யடியார்களே!
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்த ஆலயத்தில் தனி சன்னிதானமாக எழுந்தருளி அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஐயப்ப பெருமானுக்கு கட்டுப்பட்டு திருவருள் புரியும் ஸ்ரீ சனீஸ்வர பெருமானுக்கு அபிஷேகம், எள் எண்ணெய் தீபமேற்றுதல், அர்ச்சனை, தண்ணீர்க் குட அபிஷேகம் போன்ற பரிகார வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆயுள், வாகனம், தொழில், ஆரோக்கியம் போன்ற நற்பலன் வேண்டி அடியார்கள் தவறாது புரட்டாதி மாதச் சனி வாரங்கள். தோஷபரிகார வழிபாடுகளில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (ஆலயம் காலை 7:00 மணிமுதல் இரவு 9:15 மணிவரை திறந்திருக்கும்)

சனீஸ்வர தோஷ நிவர்த்தி மஹாயாகம்
மாத ஐந்து வாரங்களும் தோஷ பரிகாரங்களில் உயர்வான பலன் தரக்கூடிய மஹாயாகம் நடைபெற உள்ளது. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, சனிதிசை, சனிபுத்தி ஜாதகத்தில் சனிதோஷம் போன்ற பாதிப்புள்ளவர்கள் நற்பலன் வேண்டி மஹாயாகத்தில் உங்கள் கைகளினால் பூர்ணாகுதியிட்டு தோஷ நிவர்த்தி பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(யாகம் காலை 9:00 மணி முதல் பகல் 12:30 மணிவரை நடைபெறும்)

நவராத்திரி விரதாரம்பம்
காலம்: 26.09.2022 திங்கட்கிழமை - 04.10.2022 செவ்வாய்க்கிழமை
கல்வி, செல்வம், வீரம் வேண்டி வழிபடும் நவராத்திரி விரதத்தில் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளையும், கொலு மண்டபத்தில் கும்பம் வைக்கப்பட்டு, படிகளில் அழகிய கொலு பொம்மைகள் வைக்கப்பட்டு, சிறப்பு அபிஷேகப் பூஜை, கலை நிகழ்ச்சிகள், குங்கும அர்ச்சனை, ஸ்ரீசக்கர நவாபரண பூஜை ஹோமம் பலிசுஹாசினிபூஜை போன்றன சிறப்பாக நடைபெற்று 10ஆம் நாள் விஜய தசமியன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும், மாலை மானம்பூ உற்சவமும் (வாழை வெட்டு) நடைபெறும்.

மாலை 6:00 மணிக்கு அபிஷேகப் பூஜை
மாலை 7:00 மணிக்கு ஸ்ரீ சக்கர நவாபரண பூஜை, ஹோமம் பலி
மாலை 8:00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள், வசந்த மண்டப பூஜை
இரவு 9:00 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்
விசேட நாட்களில் பூஜை நேரங்கள் மாற்றப்படலாம். THE POOJA TIME MAY BE CHANGED ON SPECIAL OCCASIONS.

*சிவஸ்ரீ பஞ்சாட்சரம் விஜயகுமாரக்குருக்கள்*
*அவர்களின் மணிவிழா நாளில் வழங்கப்பெறும்*

## வாழ்த்து

நயினை நாகம்மை பூசைக் காதிநாள்
நண்ணுபட்டர்கள் மரபில் மன்னிய
உயர்ந்த அந்தணக் குடிகள் இன்றீழும்
ஓங்குவோர்! அந்தச் சந்ததிப் புங்கை
பயந்த நற்பஞ்சாட் சரக்குருமகன்
பாரறிபுகழ் விஜய குமார் ஐயா
நயந்திடும் மணிவிழாவில் வரசித்தி
நாதன் நல்லருள் நிரம்ப வாழ்த்துவோம்!

இங்ஙனம்
பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
இணுவில் கலை, இலக்கியக் கழகம்

பிராம்ரன்,
கனடா

உ
*சிவமயம்*

*செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின்*

## வாழ்த்துச் செய்தி

அன்பும், அறிவும் ஆற்றலும், அழகும் நிறைந்த சிவாச்சாரியத் திலகம்
**சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் விஜயகுமாரக் குருக்கள்**
அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகிறேன்.

அயராத முயற்சியால் கனடா நாட்டில் வரசித்தி விநாயகர் ஆலயத்தை ஸ்தாபித்து, இன்று அவ்வாலயத்தை பெருங்கோவிலாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். ஆலயப் பணியோடு சமூகப் பணியாக தமிழ்ப்பாடசாலையை உருவாக்கித் தரமான கல்வி வழங்கி வரும் பாடசாலையென சமூகம் போற்றும் நிலைக்கு வளர்த்த பெருமைக்குரியவர்.

தாயகத்திலும் தான் பிறந்த புங்குடுதீவு மண்ணில் தமது குலதெய்வக் கோவிலாகிய வரசித்தி விநாயகர் ஆலயத்தை இன்று அழகுத் திருக்கோவிலாக மாற்றிய பெருமை இவரைச் சாரும்.

கனடாவுக்கு நான் வந்த போதெல்லாம் என்னை அழைத்து உரையாற்ற வைத்துக் கௌரவித்தவர். எங்கள் சிவபூமி அறக்கட்டளை வளர்ச்சிக்கு நிதி வழங்கி உதவியவர்.

பண்பாலும், பணியாலும் உயர்ந்து நிற்கும் குருக்கள் ஐயா தம்பதிகள் பல்லாண்டு, பல்லாண்டு நிறைவாக வாழப் பிரார்த்தித்து, வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில்.





**கனடா, ரொறன்ரோ, ஸ்ரீ வரசித்தி விநாயகர்
தேவஸ்தான முதல்வர், பிரதம குருக்கள்,
சிவாச்சார்யமணி, சிவாச்சார்ய கலாநிதி**

## சிவஸ்ரீ பஞ்சாட்சரம்-விஜயகுமாரக்குருக்கள்

**அவர்களின்**

# அகவை 60 ஆவது மணிவிழா

**30.09.2022 வெள்ளிக்கிழமை ஆகும்.
அதனை முன்னிட்டு வாழ்த்திய வாழ்த்துக்கள்.**

கனடா நாட்டில் சைவசமயத்தினை வளர்க்கும் பணியில் சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்க்கின்ற சிவஸ்ரீ பஞ்சாட்சரம்-விஜயகுமாரக்குருக்களின் மணிவிழா சிறப்புற்று விளங்கவும், அவர்கள் நீண்ட ஆயுளுடனும், சீரும் சிறப்புடனும் வாழ வரசித்தி விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

*சிவஸ்ரீ பஞ்சாட்சரம் விஜயகுமாரக்குருக்கள்*
*அவர்களுக்கு*
*அவரது மணிவிழாவின் போது பாடி வழங்கப்பெறும்*


## மணிவிழா வாழ்த்து


கடல் கடந்து வந்திங்கு
கனடாவாம் நாட்டினிலும்
கடவுள் நெறி வளர்க்கின்ற
கடமை மட்டும் அல்லாமல்
தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்குத்
தமிழ், சைவம் கற்பித்து
நமது கலை, கலாசாரம்
நயந்து வளர்க்கின்ற குரு
பஞ்சாட்சரம் விஜயகுமாரப்
பரமகுரு காண்கின்றார்
குஞ்சரக்கோன் அருளாலே
போலமணி விழா இன்று
பூத்தூவி, பாப்பாடி
ஏத்தியிறை வாழ்த்திடுவோம்!


இங்ஙனம்
இரத்தினம் - விசாகன்

ஸ்காபுரோ,
கனடா

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?


மேடராசி அன்பர்களே! எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். இருக்கும் இடம் விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரத்தில் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும்.


ரிஷபராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும். புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் ஆலய வழிபாடு செய்யவும்.



மிதுனராசி ராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நீண்டநேரம் பணியாற்ற வேண்டியிருக்கும்.


கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். ராசியாதிபதி செவ்வாய் சஞ்சாரத்தால் வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும், வாங்கும் போதும் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், கூடுதல் உழைப்பும் இருக்கும்.


சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மை அதிகரிக்கும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இது வரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் புதிய பதவி தேடிவரும். வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்.


கன்னிராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு, மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டிய வரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் இருந்த தடைகள் உடையும். உத்யோகத்தில் வேலை பளு அதிகரிக்கும். பெற்றோர் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



துலாம்ராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்யோகத்தில் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். வேலையை விட்டு விட்டு வேறு வேலைக்கு செல்லலாமா என்று கூட தோன்றலாம். மனம் தளராமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் அமைதி நிலவும்.



விருச்சிகராசி அன்பர்களே! அதிமுக்கிய காரியங்கள் சுபமாக நடந்து முடியும்.பயன்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு உண்டாகும்.




தனுசுராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். வேலையில் மாற்றம் உண்டாகலாம். ஐயப்பன் தரிசனம் செய்யவும்.


மகரராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். இருக்கும். வீண் பிரச்னைகள் நீங்கும். மரியாதை அந்தஸ்து உயரும். வெளிநாட்டு பயணங்கள் கை கூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.


கும்பராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் சாதகமாக முடியும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். திருமண முயற்சிகள் கைகூடும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கும்.


மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். பணவரத்து அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற நிலை காணப்படும். வியாபார நிமித்தமாக பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## வடக்கில் 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி) கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களையும் யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் முன் முற்படுத்தி விசாரணைகளை முன்னெடுத்த வேளை யாழில் உள்ள பிரபல பாடசாலையில் க.பொ. த உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையத்திற்கு மேலதிக வகுப்புக்காக வந்து நண்பனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது மது அருந்தியதாக தெரிவித்துள்ளனர்.

அதனை அடுத்து மாணவர்களை கடுமையாக எச்சரித்த மூத்த பொலிஸ் அத்தியட்சகர், மாணவர்களின் பெற்றோரை அழைத்து மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தாது விடுவிப்பதாகவும் பிள்ளைகளை கண்காணித்து அவர்களை ஒழுக்கமான பிள்ளைகளாக வளருங்கள் என எச்சரித்து மாணவர்களை அனுப்பி வைத்துள்ளார்.

## “மிர்” இலங்கைக்கு புதிய தலைவலி!

(18ம் பக்கத் தொடர்ச்சி) இதனால் தற்போது மிர் அட்டை பாவனையில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை 7 ஆக சுருங்கியிருக்கிறது. பெலாரஸ் எகிப்து, கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசுவேலா, கியூ பா ஆகியனவே அவை. இவற்றில், நான்கு நாடுகள், முன்னாள் சோவியத் ஒன்றியத்தை சேர்ந்தவை. வெனிசுவேலா, கியூபா என்பன ரஷ்யாவின் பாரம்பரிய கூட்டாளிகள்.

அதேவேளை, மிர் அட்டையை ஏற்றுக் கொள்வது குறித்து ரஷ்யாவுடன் பேச்சு நடத்தி வருகிறது மியான்மாரின் இராணுவ அரசாங்கம் இந்த நாடுகளுடன் இலங்கை இணைந்து கொள்வது பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்காது. ஆனாலும், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதாயின், அவர்கள் இலங்கையில் தங்களின் நாட்டுப் பணத்தை செலவிடுவதற்கு, வழியொன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால் சட்டரீதியாக ரஷ்யா அமெரிக்க டொலரைப் பயன்படுத்துவதற்கு, அமெரிக்கா தடை விதித்துள்ளது. ரஷ்யாவிலும் டொலர் நெருக்கடி காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள், அமெரிக்க டொலரைப் பெற்றுக் கொண்டு வந்து, இலங்கையில் செலவழிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.எனவே மாற்று வழியொன்றை இலங்கை அறிமுகம் செய்ய வேண்டியிருக்கும். ஆனால் மிர் அட்டையை அறிமுகம் செய்வது சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகப்படுத்தினாலும், அது இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு பிரச்சினையை தீர்க்க உதவாது.

ஏனென்றால் இலங்கைக்கு தேவைப்படுவது டொலர் தான். ரஷ்யாவுடனான கொள்வனவு, கொடுப்பனவுகளுக்கு மட்டும் தான் மிர் முறையை பயன்படுத்த முடியும். இவ்வாறான நிலையில் மிர் அட்டை விவகாரத்தில் இலங்கை அவசரப்பட்டால், மேற்குலகின் உதவிகளையும், ஆதரவையும் இழக்கும் நிலை ஏற்படலாம்.

## தமிழக இந்து மக்கள் கட்சி பகிரங்க அறைகூவல்!

(7ம் பக்கத் தொடர்ச்சி) கண்ணோட்டத்தோடு இந்து தமிழர் களின் அடையாளமாக திகழும் சிவன் கோயிலை ஆக்கிரமிக்க முயற்சிப்பதும் இராவணன் வெட்டு என்பதனை பௌத்த தடயமாக மாற்ற முயற்சிப்பதும் கன்னியா வெந்நீரூற்று பகுதியில் புத்தர் சிலையை வைத்து ஆக்கிரமிக்க முயற்சிப்பதும் திருகோணமலையில் உள்ள இந்து தமிழர்களின் அடையாளங்களை அழிக்க முயற்சிப்பதும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இது குறித்து இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கத்திடம் எச்சரிக்க வேண்டும். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடமும் இந்து மக்கள் கட்சியின் சார்பில் புகார் செய்யப்படும். திருகோணமலை சிவன் கோயில் மற்றும்திருகோணமலையில் வசிக்கும் பூ ர்வகுடி இந்து தமிழர்களை காப்பாற்றிட உலகெங்கிலும் இருக்கக்கூடிய 120கோடி இந்துக்களும் ஒன்றுபட்டுசெயல்படுவோம் என்று அர்ஜீன் சம்பத் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்துக்களின் தனித்துவத்தை பாதுகாத்தல்?

(3ம் பக்கத் தொடர்ச்சி) . இதனை உலகளாவிய ரீதியிலான ந்துக்களுக்கான சர்வதேச ஸ்தாபனங்களோடு ஒன்றிணைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள், சர்வதேச அளவில் தங்களை ஒன்றிணைத்துக் கொள்வதன் மூலம்தான் முடிந்தளவு பாதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

## தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில்

(8ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறாக நினைவிடத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அமைப்பை சேர்ந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொண்ட அநாகரிக செயற்பாடு அப்பகுதியில் நின்ற மக்கள் மத்தியில் கடுமையான விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

## ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல்

(19ம் பக்கத் தொடர்ச்சி) எந்தவொரு சத்தியமும் இல்லை அப்படியொரு அரசியல் தீர்வை நோக்கி கொழும்பின் ஆட்சி யாளர்களை நிர்ப்பந்திப்பதற்கான எந்தவொரு வெளித் தலையீடும் இல்லை, அவ்வாறானதொரு தலையீடு வரப் போவதுமில்லை தமிழர்களுக்காக சிங்களவர்களை விரோதித்துக் கொள்வதால் வெளித்தரப்புகளுக்கு என்ன இலாபம் உண்டு? இந்தக் கேள்வியிலிருந்து தான் ஒவ்வொரு விடயத்தையும் நாம் நோக்க வேண்டும். உண்மையில் ஜே.ஆர்.ஜெயவர்தன அன்று, இந்திராகாந்தி தலைமையிலான இந்தியாவை உதாசீனம் செய்து, சில முடிவுகளை எடுத்தமையால் தான், இந்தியா அதிருப்தியுற்றது. அதன் காரணமாகவே நேரடியாக தலையீடு செய்தது. ஒருவேளை ஜே..ஆர். விடயங்களை சரியாக கையாண்டிருந்தால், இந்தியா நேரடியான தலையீட்டை ஒரு போதுமே செய்திருக்காது. தவிர, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்களால் ஒரு போதும் அரசியல் தீர்வை ஏற்படுத்த முடியாது.

ஏனெனில் குறித்த பிரேரணைகளால் நாடுகளை கட்டுப்படுத்த முடியாது. எனவே விடயங்களை எப்படிப் பார்த் தாலும் கூட, இறுதியில் தமிழர் தரப்பிடம் இருப்பது, 13ஆவது திருத்தச் சட்டம் மட்டும் தான். இன்னொரு கேள்வியையும் இந்த இடத்தில் கேட்டுக் கொள்ள வேண்டும். அதாவது, 13 ஆவது திருத்தச் சட்டத் தையே அமுலப்படுத்துவதற்கு அழுத்தங்கள் தேவைப்படும் போது அதனை இல்லாமலாக்க வேண்டுமென்று சிங்கள பௌத்த தரப்புகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் போது, 13இனை தாண்டிய அரசியல் தீர்விற்கு எவ்வாறு கொழும்பு இணங்கப் போகின்றது? எந்த அடிப்படையில் அவ்வாறானதொரு தீர்வு வருமென்று தமிழர்கள் நம்பலாம்? இதனை நம்புமாறு எவ்வாறு தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களை கோரலாம்?

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI
THIRUKESWARAN
LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC
KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம்
உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு
நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி
உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும்
தேவை எங்களுக்கு உண்டு என்பதை
இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.